உ

கணபதி துணை

நித்திய கன்ம நெறி.

திருக்கைலாய பரம்பரை தருமபுரம் ஆதீனம்

சிதம்பரநாத முனிவர்

இயற்றியருளியது.

Cl. 50225

இஃது

ஷை ஆதீனம் 23-வது குருமூர்த்தியாக எழுந்தருளியிருக்கும்

ஸ்ரீ-ல-ஸ்ரீ

சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள்

ஆக்ஞைப்படி

ஷை ஆதீனம் அடியார் குழாத்தினர்களாகிய

வித்வான்

சட்டைநாதத் தம்பிரான் சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு [illegible]

கார்பார்

இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகளால்

மாயவரம்

ஆனந்த ஸாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

பிரபவஸூ ஆனிமீ

1927.

Copy-right Registered.

குருபாதம்.

முகவுரை.

சிதம்பரநாத முனிவரென்பார் இற்றைக்குச் சற்றேறக்குறைய இருநூறு வருடங்களுக்குமுன் திருக்கயிலாய பரம்பரைத் தருமபுராதீனத்தில் பத்தாவது குருமூர்த்தியாக எழுந்தருளியிருந்த ஸ்ரீ சிவஞான தேசிக பரமாசாரியர் திருமுன்னர்த் திருவருட்செயலாற் றூமையடைந்து வழிபட்டு பரமாசாரியருடைய கிருபாநோக்கிற்குப் பாத்திரராகி பரமாசாரியரிடத்திலும் அடியார்களிடத்திலும் முறுகிவளர்ந்த பத்தி விநயங்களையுடையவராய் இருந்து ஆதீனத்திலேயே தென்மொழி வடமொழிகளைக் கற்றுணர்ந்து அதிவல்லுனராய் ஆசிரியர்பாற் சமைய விசேட தீக்கைகளைப் பெற்று அவற்றிற்குரிய சரியை கிரியை யோகங்களாகிய நித்திய கன்மானுட்டானம், ஆலய தரிசன சிவபூசாதிகளை முறையே செய்துவருங்கால், அருள் வசத்தாய் இவருளமானது பிறவிப் பெருங்கடலைக் கடப்பதற்குச் சைவசந்நியாசப் பெரும்புணையையே அவாவுவதாயிற்று. நிற்க.

சுத்தாத்வைத சைவசித்தாந்த பானுவாய் விளங்கா நின்ற சிவஞான தேசிக பரமாசாரியர் சிவத்தல யாத்திரையாகச் சென்று பல தலங்களையும் தரிசித்துக் குருக்ஷேத்திரமாகிய திருவாரூரையடைந்து மூலட்டானேச்சுரரையும் தியாகராஜப் பெருமானையுந்தரிசித்து, அசபா நடேசர் பதிகம் அருளிச்செய்து தோத்திரித்துப் பின்னர் அடியார்கள் வேண்டுகோளுக்கிரங்கிக் கொலுவீற்றிருந்தருளுவாராயினர். அப்போது தமிழாகர முனிவர், பஞ்சாக்கர முனிவர் நிரம்ப வழகிய புலவர். கவிவீரராகவ முதலியாராதிய பலரும் பல பாக்களாற்றுதித்து வழிபட்டு நிற்க இச்சிதம்பரநாத முனிவரும் சிவஞான தேசிகர் பதிகம் என்னும் நூலையியற்றித் தோத்திரித்து அதில் 9-வது பாடலாக

மொழிவதுன் னாமங்கள் கேட்பதுன் கீர்த்திகள்
முடிமிசையி லணிவதுன்றாண்
முண்டகப் போதுமப் போதுங் குடிப்பதுன்
முண்டகத் தாள்விளக்கிப்
பொழியுநீர் மெய்யினிற் பூசுவதுன் னீற்றினைப்
பூண்பதுன் னக்கமாலை

புசிப்பதுன் பரிகலச் சேடநீர் மலர்கொண்டு
பூசிப்ப துன்னடியிணை
விழிகொண்டு காண்பதுன் வடிவுவலம் வருவதுன்
மிளிர்தருமை மதுரையாரூர்
மேவும் பெருந்திரு மடத்தையுன் னடியனேன்
விரித்து டுப்பதுமாத்திரம்
செழுமை யில்லாதபிறர் கலைசிறப் பல்லவுன்
செங்கலைக ளாகவைப்பாய்
திருமங்கை யுறைகமலை நகர்தங்கு சிவஞான
தேசிகசம் பந்தகுருவே

எனத் தமது எண்ணத்தை விண்ணப்பித்து பரமாசாரியர் அனுக்கிரகத்தினால் அடியார் குழாங்களிலொருவராகிய * சங்கரகுமார முனிவரிடத்தில் சைவசந்நியாசத்துக்குரிய யாத்திரை காஷாயம் பெற்று, பின் ஞானசாரியார்பால் சமைய விசேட தீக்கைகளும் சிவபூஜை, மந்திர காஷாயமும் பெற்று பின்னர் ஞானசாரியரால் இருவினையொப்பு, மலபரிபாகம் உடைய

---

* சங்கரகுமார முனிவர் தருமபுரம் ஸ்தலபுராணமும் சச்சிதானந்த விநாயகர் பிள்ளைத் தமிழ் முதலிய பிரபந்தங்களும் இயற்றியருளினர்.

ராய்ச் சோதிக்கப்பட்டு சத்திபதித்து தீட்சைச்குறை ஞானதீர்கை, ஞானோபதேசமும் அருளப்பெற்று சிவ ஞானங்கைவந்தவராய்த் தருமையம்பதியிலே அடியார் களோடு ஆசாரிய தரிசன பராயணராய் வசித்துவரு நாளில் திருக்கடவூர் பஞ்சாக்கர முனிவர் கேட்டுக் கொண்டபடி வடமொழி யாகமங்களையும், பத்ததிகளை யும் ஆராய்ந்து நித்தியகன்மவிதியைத் தமிழில் குறட் பாவால் **நித்திய கன்ம நெறி** யென்னும் பெயருடன் அருளிச்செய்தார்.

இந்நூல் பெரும்பான்மையும் கடுஞ்சொற்பிரயோக மில்லாதமையைப் பெற்றிருக்கிறது.

தியானவிதிமுதல் போசனவிதி யீறாக 9 பகுப்பு டையது.

செபவிதியில் அனுட்டானம், பூசையில் உண்டா கும் வழுக்களுக்குச் செபரூபமான பிராயச்சித்தமும் நன்றாகக் கூறப்பட்டிருக்கிறது.

இந்நூலை சமயவிசேட தீக்கைபெற்ற பின்னர் ஆசிரியர்பால் முறையே ஓதி உணரவேண்டும்.

தீக்கைபெறாதவர்கள் இந்நூலை யோதுதற்கும், ஓதுவித்தற்கும் உரியராகார்.

தரு. ஞா. சட்டைநாதத் தம்பிரான்

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௰௩	௰௨	தீக்கதர்	தீக்கிதர்
௰௭	௰௮	துமவிடத்	தும்விடத்
௰௯	௰௧	செுய்தே	செய்தே
௨௧	௰௬	குண்ட	குட்ட
௨௩	௮	யாய்ச்	யாச்
௨௪	௰௧	ஓரு	ஒரு
;;	௰௭	ஓண்	ஒண்
௨௫	௰௮	வலககை	வலக்கை
௨௬	௫	சுங்கிதை	சங்கிதை
௨௮	௨	டைந்ன	டைந்து
௨௯	௰௫	செப்பிமு	செப்பிமூ
௩௰	௰௯	மாச்சி	மார்ச்சி
௫௨	௩	மூதத்தா	மூலத்தா
௫௮	௮	முலமனு	மூலமனு

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௯௰	௰௩	அரன்மூ	அரனதுமூ
௯௩	௨௰	தஇய	இதய
௯௯	௫	ரைக்குநூ	ரைந்நூ
௭௧	௰௭	வார்ச்சனை	வர்ச்சனை
,,	௰௯	லைஞ்நு	லைஞ்ஞு
௭௨	௭	அஞ்நு	அஞ்ஞு
,,	௮	ரைஞ்நு	ரைஞ்ஞு
௭௯	௯	யொத்தான்	யொத்தவன்
,,	௰௩	காலபிமந்	கால்மந்

நித்தியகன்மநெறிக்குப் பழைய வுரையொன்றிருக்கிறது. அஃது ஆராய்ச்சிசெய்து பின்னரச்சிடப்படும்.

உ

கணபதி துணை.

சிவமயம்.

நித்தியகன்ம நெறி.

காப்பு.

அத்தனரு ளாகமத்தி னாய்ந் தவாவினிற்செய்
நித்திய கன்ம நெறிதனக்கு—முத்திதரும்
அன்னத்தா னத்தான் பரவைமுகத் தானருளுங்
கன்னத்தா னத்தானே காப்பு.

நூல்

தியானம்.

சீர்தங்கு செங்கதிர்கீழ்த் திக்கெழுமுன் னர்க்கடிகை
யோரைந் தெனவெழுந்தே யோர்ந்து ... க

சுசியெனினு மன்றெனினுங் கூடியமெய்ச் சுத்தி
யிசைவாகச் செய்துநீ றிட்டு ... ௨
எண்சமையி ருத்திரனை நெஞ்சிற் சதாசிவனை
யெண்கிரியை யானுமாங் கே ... ௩
யோகிவிந்து நாதம் புருவநடு வுண்ஞானி
சோகம்பா வித்திடுக தோய்ந்து ... ௪
இன்ன லறவியன்ற வா றுசெபித்தேமூலம்
மன்னுமரன் றாளிணையும் வாழ்த்து ... ௫
பூதி யணிந்தே புறத்திற் புறப்படுக
பூதியணி யாதொழிந்த போது ... ௬
அற்றைக் குபவசியா யானைந் தினையருந்த
லுற்றே யிருநா றுரை ... ௭
உன்னுன் பிராம்ய முகூர்த்தத் திருகுணித
முன்னுணர்வோ னற்குணித முன் ௮

தியானம் முற்றிற்று.

அவசிய கருமம்.

மணலுவர் மண்ணீர்க்குண் மண்வேர்மண் புற்றோ
டெணுசுவர்மண் சுக்கா னிழித்து ... ௧

கார்கால மல்லாத காலம் புனிததலத்
தேராரு மத்திரஞ் சொல்லி ... ௰
எட்டுவிரற் கீழாமண் வெட்டியித யத்தெடுத்துக்
கொட்டிச் சுசித்தலத்திற் குள் ... ௰௧
வைத்திடுமண் ணான்கு திங்கட்காமந்த மண்ணெடுதண்
டத்தத்திற் கொண்டுகர கம் ... ௰௨
மிக்கதந்த காட்டாதி கொண்டீர்க்கி சானவியன்
றிக்கொழித்து நேர்படுதிக் கில் ... ௰௩
ஆலயத்திற் கப்பாற் சததண் டளவகன்று
சேலையான் மூடிச் சிரம் ௰௪
விளைநில மாறுகுளம் வீதிமடங் கோயில்
களர்கற்புற் றப்பின் கரை ... ௰௫
வழிமரநீ மூல்பசுமந் தையறுகம் பூமி
குழிமேடு காவருகிற் குள் ... ௰௬
அசுத்த நிலஞ்செந் தடுத்தநில மீமத்
தசுத்த மலாதிகளைந் தால் ... ௰௭
சறுவசங்கா ரத்தளவுந் தாழ்ந்தநர கத்தி
னுறுவரத ஞான்மோன முற்று ... ௰௮
அலாதபுவிப் பூத விகாரமற்று மாந்த
ரிலாதவிடத் திற்றிரண மிட்டு ... ௰௯

அகலவங்கண் மேவுமம ராதியரை வேண்டிப்
பகல்வடக்குத் தெற்கிரவும் பார் ... உ௰
ஆசைதவர் கோப்பருதி யாண்குறிகட் டப்பாரேல்
நாசி நுனிதனையே நாடு ... உக
உமிழாது வாய்நீர் மலம்விடுத்தோ மத்திற்
கமையாக்கொம் போடுமண்பிண் டம் ... உஉ
மாணிலெருச் செங்கலால் வாய்த்தகுத நீவிலிங்கம்
பேணியிடக் கையாற் பிடித்து உ௩
தீர்த்தமலா நீர்க்கோட்டி னிற்சென்றோர் தெங்கின்காய்
மாத்திரமண் வைத்து வலம் ... உச
ஒருசாணீர்க் கிப்பா லிருந்துகுய்யத் தோர்கான்
மருவுகுதத் தோரைங்கான் மண் ... உ௫
இடையிடையி லோர்கா லிடக்கை யினுக்கு
முடிவிலதற் கீரைம் முறை ... உ௬
இருகாமுஞ் சேர்த்தெழுகாற் பெய்து கழுவி
விரவுபிருட் டஞ்சுசிசெய் மேல் ... உ௭
தூய்மையுறு தாயினுறச் செய்கமுனஞ் சொல்லியமண்
ணாமலக மட்டென் றறி ... உ௮
முழங்கான் முழங்கை முடிவொருகாற் பூசிச்
செழும்புனலி னாற்சுத்தி செய் ... உ௯

இதுவில்லார்க் காகுமுறை யேயிருமை மும்மை
சதுர்மடங்கா மூவருக்குந் தான் ... ௩௰
மற்றோர் துறையுற்று வாய்நயன நாசிசெவி
யுற்றகரங் காலி னுகிர் ௩௧
சுத்திசெய்நீ ரெண்கா லிடத்துமிழ்ந்து தோயத்துள்
வைத்திடக்கா றன்னை மகிழ்ந்து ... ௩௨
நகைபராக் குத்தலைக்கட் டின்றிநவில் சானு
வுகளத்துட் கைக ளூற ... ௩௩
உத்தர நோக்கி யுறைந்துகுக்கு டாசனமாய்
முத்தோ தகநுரைமொக் குள் ... ௩௪
தோற்றுபுழு நீருவர்நீர் தூய்மையுறு நீராதி
மாற்றி வெந்நீ ராதியையு மாற்று ... ௩௫
இன்றியமை யாததுசெய் தாலியைந்த தோடுமுழுந்
தொன்றமிழ்ந்து நன்னீ ருவந்து ௩௬
கோகன்ன முத்திரையாற் கூர்பிரம தீர்த்தத்தா
லாகுமனு விட்டா சமி ... ௩௭
தவற தருமான்ம தத்துவமுன் மூன்றுஞ்
சுவதாந்த மாகச் சொலி ... ௩௮
அடைவேமுக் தத்துவத்து மாசமித் தோர்கா
லிடையிடையிற் கைகழுவி யே ... ௩௯

அங்குட்ட மூலத் ததரத்தை யத்திரத்தாற்
றங்கத் துடைத்திருகாற் றூன் ... ௪௰
அத்த தலத்தா லதோமுகமா யத்திரத்தால்
வித்தகமாய் வாயைநீ வி ... ௪௧
வத்திர நாசிகண்கா துந்திபித யம்வாகு
வொத்தசிரம் பன்னிரண்டி னும் ... ௪௨
அங்குட்டஞ் சேர்ந்த வனுமிகையி னுற்றொடுநீர்
தங்கவல முன்னிதயத் தால் ... ௪௩
எடுக்குநீ ரேல்வடித்துப் பூமியில்வைத் தென்று
மிடக்கையாற் சாய்த்தாச மி ... ௪௪
விதியா முழுந்தமிழ்ந்து நீரே விசிட்ட
மதிகநூ னஞ்சுரைக்கொப் பாம் ௪௫
பாற்கர னுதியரை நீர்மலம்போக் கும்பதத்தி
ஞேக்கினனேற் கூறுக நூறு ... ௪௬
கொட்டாவி தும்ம லுமிழ்தலெழு வாய்குபிற்றிற்
கட்டநீர் மோசிக்குங் கால் ... ௪௭
பையவோங் காரமிரு பத்தோ ருருச்செபித்துச்
செய்கமுக்கா லாயாமந் தேர்ந்து ... ௪௮
அரன்முற்ற மாராமத் தின்மலநீர் நீக்கிற்
பிரமஞ் சதம்பசித்துப் பேசு ... ௪௯

மலைநீ ருவருமுத மண்ணாதிநீ ரத்துச்
சலமலநீக் கிற்சொல் சதம் .... ருய
ஆறொர் மரத்தடிநாற் சந்தியதி லாகிலிரு
நூறறிந்தோர் கூறுகமுந் நூறு ... ருக
மலாதிகளை யந்தமே தேனுமருந் தந்தஞ்
சலாதிபரு கந்தந் தனில் .... ருஉ
ஆசமியா ரன்றுபசி யோடா யிரமறைக
வாசகலக் கொண்டுகவ்வி யம் ... ருங

அவசிய கருமம் முற்றிற்று.

தந்தசுத்தி.

ஆலரசு நெல்லிவிர லாவிரைசெங் கற்சாம்பர்
பான்மரங்கள் பட்ட மரம் .... ருச
உறுமணலே ரண்ட முருங்கைபலா சோடு
நறுவிலிநீர் வஞ்சி நமை ... ருரு
வெளிற்றுமரம் வேதாளப் பேர்மரம்வை வேம்பு
புளிக்கொம்பிற் சுத்திதவம் போம் ... ருசு
மருதுகுமிழ் புன்குநொச்சி வாகைகருங் காலி
விரவாயில் கண்கோணை விட்டு ... ருஎ

பச்சைதோ லோடிருநான் கங்குலநீ ளம்பருமை
வைச்ச கனிட்டையள வாம் ... ருஅ
கொம்புதரக் கொண்டதனிற் கூறிதய மந்திரித்தே
யிம்பர்வடக் குப்பார்த் திருந்து .... ருகூ
நாய்நீச ரென்பசங்கட் டம்பூத்த நாரிகரு
மாநோக்கா மன்மோன மாய் ... கூ0
துறவியெந்த நாளும்பற் சுத்தி வலமா
யுறவியற்றி யேபுறம்புள் ளும் ... கூக
நாவை வழித்திடப்பாற் போட்டுமுந் நான்குதராஞ்
சீவனம்வா மத்துமிழ்தல் செய் .... கூஉ
எரிநிரயத் தெய்துவர்மோ கத்திறு லேனும்
அரியவலப் பாலினுமிழ்ந் தால் ... கூங
சீடருத வுங்கொம்பின் றேற்சருகாம் பற்சுத்தி
நீடுகதி ருற்றபின்பண் ணேல் ... கூச
பண்ணிற் பராமுகமா மந்திரங்க டாம்வெறுப்பர்
விண்ணோர் முதலோர் மிக ... கூரு
கிரகிமா வாத்திவிளாக் கீசகம் பூலா
மருதுசம்பு நீப மகிழ் .... கூகூ
சங்கிறலி நாயுருவி பிண்டிசண்ப கங்குருகா
மங்குலமுந் நான்குநீ ளம் .... கூஎ

ஆமுன் விதிப்படிகீழ்த் திக்குப்பார்த் தேமாசு
போமளவுஞ் சுத்தி புரி ... ... கூஅ
முற்றிதி யாறென்பா ணெம்மூன் று திங்களின்மு
னுற்றவுப ராகத்தி னும் ... ... கூகூ
விதிபாத மாதியினு மேவில்லோன் செய்க
வுதிர்சருகாற் சுத்தி யுற ... ... எ௰
சருகுமின்றேற் பன்னிருகாற் றண்ணீ ருமிழ்க
வொருவர்க்கன் றீதெல்லார்க் கும் ... எக
விதியாநா ளிற்பல் விளக்கிற் குலமே
ழுதிகநர கத்திலுறு மால். ... ... எஉ

தந்தசுத்தி முற்றிற்று.

ஸ்நானம்.

நீராடல் பூசை நியதி புசிப்போம
மீராடை யோடே யியற்று ... ... எங
ஓமத்தி லர்ச்சனையி லுன்னுதியா னஞ்செபத்திற்
றீமையறு நானத்தி னில் .... எச
மலசல நீக்கிற் புசிக்கின் மவுனம்
விலகா ரறிவுமிகுந் தார் .... எரு

வாருணம் பூதி மனுமா னதநான
மீரிரண்டு நானநித்தி யம் ௭௬
வாயவியங் கௌரவம் பார்த்திவந் திவ்விய
மாயிலென்று நைமித்தி யம் ௭௭
கிணறகழி வாவிபொய்கை கேடில்கங்கை யாதி
புணரி புகுஞ்சங்க மம் ௭௮
சோமனணிந் தான்கோயிற் பாங்காருந் தோயமிவை
யாமொன்றுக் கொன்றுவிசே டம் ... ௭௯
ஆசமனஞ் செய்துசக லீகரணஞ் செய்தறல்மண்
வீசியைம்பிண் டங்கரையின் மேல் ... ௮௰
தெரித்தவிதி மண்கவசத் தான்முக்கூ றாக்கி
யரைக்கீழொன் றூற்புனித மாக்கு ... ௮௧
பின்னுமொரு கூற்றைநா பிக்குமே லத்திரத்தைப்
பன்னியெங்கும் பூசிப் பரிந்து ... ௮௨
கண்கன்னந் துண்டமிவை யைக்கரத்தி னுன்மூடிச்
சண்முகி முத்திரையாற் றூன் ... ௮௩
உத்தரந்தான் பூருவந்தா னோக்கியுந்தி மட்டறலி
னத்திரத்தை யுன்னிநீ ராடு ௮௪
நற்சிரமீ தத்திரத்தி னூற்புரோக் கித்துமுக்கா
லற்கியமீந் தேசிலசெப் பாய்ந்து ... ௮௫

ஒழிந்தமண்ணை வைத்திடக்கை சங்கிதையோ திக்கா
ரிழிந்துகுணக் குத்தரந் தெற்கில் ... அசு
மூன்றாக்கி யொவ்வொருக்கா லத்திரத்தான் மூலத்தா
லான்றபஞ் சப்பிரமத் தால் ... ... அஎ
மொழிந்தமுறை முன்மந் திரித்துக்கீழ்க் கூறா
சொழிந்ததச திக்கினும்போ டோர்ந்து அஅ
வடகூற்றை நீரிற் கரைத்துவளர் மூலத்
தடையச் சிவதீர்த்த மாக்கு ... ... அகூ
தென்கூ றுடற்பூசிச் சம்புவைச்சிந் தித்தறற்றோய்ந்
தண்விதுவென் றாழ்க்கரங்களால் ... கூம
சத்தாம் வவுஷடந்தஞ் சங்கிதைகொண் டேகும்ப
முத்திரையா னீர்பன் முறை ... ... கூக
சென்னி மிசையபிடே கித்தத்தி ரத்தினு
லெண்விதிக்கிற் றிக்கிவிறைத் தே ... கூஉ
நெல்விமுத லாலாடி நீடிருந்தீர்த் தம்மொடுக்க
லல்குபிரா சாதத்தா லாம் ... ... கூங
ஈர முலர்ந்ததுகி லான்மாற்றல் செய்கவிது
வாருண நான மதி ... ... கூச
ஈரத்துகிலுடுத்துச் செய்கன்ம நிட்பலமே
வாரியின்மூழ் கிற்சுசியா வார் ... கூரு

காய்ந்ததோர் கோவணங்கைக் கொண்டு தரித்திடுக
காய்ந்தகலிங் கத்திணையு மே ௧௬

நிதம்ப வரையளவே நீள்கோ வணந்தான்
சிதம்பெறுநா ணைம்பதிழை தேறு ... ௧௭

அந்நாண்முக் கூற்றி லொருகூற் றளவுநாண்
முன்னிடத்திற் றெங்க முடிந்து ... ௧௮

வாமத்தி னுணபி யைவலமா யேதரிநன்
காமென் கடிசூத் திரம் ௧௯

உந்திக்கு மேல்கீழ்த் தரித்தால்வா ஞளுலக்கு
முந்துதவ நாசமா கும் ௨

இல்லத்தேன்முன் போன்மிருத் திகைநானஞ்செய்தே
மல்குபுனலே வடித்து ௨௧

உரியவஞ்செட் டொன்பதுகும் பத்துறு நீரி
லரன்மூல மந்திரித்தே யாடு ௨௨

மூழ்க வசத்தர் களமளவோ மொய்த்தகடி
தாழும் பதத்தளவு தான் ௨௩

நீரிற் கழுவிக் கழுவாம னின்றவங்க
மீரத்து சாற்றுடைத்திட் டே ... ௨௪

உம்படந்த வத்திரத்தா லொள்வலக்கா லங்குட்ட
வங்கியினுன் மெய்மா சடர்த்து ... ௨௫

சத்தி யமுத சலத்தா லுடனனைக்கச்
சுத்தியதா மென்றே துணி ௱௬
விழவி னமரின் மகமணத்தின் மேலூர்
தழலுற்று வேங்கா றனில் ௱௭
தீர்த்தங் கலகம்வழிச் செல்ல விடர்தேவ
யாத்திரையிற் றீட்ட திலே ௱௮
சண்டாளர் பாண ரிரசகரென் போர்தமக்குத்
தண்டிரண்டா கும்விலக ரூன் ... ௱௯
சார்ந்தமக வீன்றா டனக்கொன் றரைத்தண்டா
சூர்ந்த விருதுமதிக் கொன்று ... ... ௱௰
ஒட்டகநாய் கோழி புறாச்சுடுகா டேர்ப்பன்றி
குட்ட ரதீக்கதார்கள் கொக்கு ௱௰௧
உலகிற்கன் மாரறுவர்க் குந்துகமொன் றாகும்
விலகல் விலகா விடில் ௱௰௨
குரவ னரன்றிரவி யங்கெடுப்போர் கொள்வோர்
கரமாகூ சத்தார் கழுகு ௱௰௩
கூகை மறுசமயி யென்பொடு கோபிதுட்டர்
காக நரிதடிகங் கம் ௱௰௪
நின்மா லியம்புசிப்போ னீடுறுப்பீ னன்பதிதன்
கன்மகீ னன்னுத்தி கன் ௱௰௫

என்னுமிவற்றைத்தொடிலெச்சின்மலநீர்சுக்கிலங்கை
பன்னரைக்கீ ழன்றிப் படில் ௱௰௬
வபனம் வமனத்தும் வாருணாநா னம்பண்
சுபமல்லாச் சொப்பனத் தும் ... ௱௰௭
அறன்மூழ் கிடுகபுற வாதியி னத்தி
யிறகுதுண்ட மாதிதொடினே ... ௱௰௮
இழிஞர் பதிதர் கரமகவீன் ருடன்
னிழல்படினு மூழ்கிடுக நீர் ௱௰௯
ஒருகான்மூழ் காது வினைசெய்யிற் சாதந்
திரிகாற் சதமுரைக்க தேர்ந்து ... ௱௨௰
நோய ரெனிலொருகா னுஞ்சங் கிதையதனை
வாயினாற் சொல்க மதித்து ௱௨௧
நானமர்ச்சனைசெபமோ மந்தியா னாதியிவை
யீனமிலா நித்தியமென் றெண் ௱௨௨
கருதானி கன்னி தனுப் பங்குனிமா தாதி
யரிபசட சீதிமுக மாம் ௱௨௩
இந்நான் முதனா ளினுக்கீரெட் டாங்கடிகைப்
பின்னாநற் காலமெனப் பேசு ... ௱௨௪
தேள்கும்ப மேறுசிங்கத் திங்களின்முன் விண்டுபதி
மூளுமீ ரெண்கன்னன் முன் ... ௱௨௫

முன்னலமீ ரெண்கடிகை யாடியய னத்துமொழி
பின்னலந்தைக் கீரெட்டாப் பேசு ... ௱உ௬

இருவிடு வுக்குமுன்பி னெவ்வெட்டாங் கன்னல்
கருதுகவிக் காலங் களில் ௱உ௭

பாம்பு பருதிபற்றுங் காலே மதிவிடுங்கா
லாம்புணிய கால மதில் ௱உ௮

இருநான்கீ ரேழு விதிபாத மெய்துந்
திருவாரு நல்லதினத் தில் ௱உ௯

குன்றுநாண் மாதத்திற் கூர்நாணற் பஞ்சதசி
யென்ற விவைக ளினில் ௱௩௰

இருகுணிதஞ் செய்க செபம்பூசை யாதி
கருதுமிவை நித்தியாங் கம் ௱௩௧

இருநிசியி லட்டமியே லேற்றங்கொ ணோராய்
வரின்முந் தினமே வரம் ௱௩௨

மயிர்நெல்லி யாற்சுத்தி வாய்கொம்பாற் றுண்ட
நயனஞ் செவிநீரி னால் ௱௩௩

மற்றுளவங் கம்புனலான் மண்ணாலு மாஞ்சுத்தி
யுற்றவிவை நித்தியமா கும் ௱௩௪

சுத்தி கழுவச் சிலேபிநெடு தூயமணி
முத்துப் பிரவாள மும் ௱௩௫

ஆம்புனிதந் தாதுக்க ளாம்பாத் திரமனைத்துஞ்
சாம்பராற் றான்புளியாற் றான் ... ௱௩௬
அருவருப்புண் டேற்கோ சலத்தால்வெந் நீரா
லரியபொன் வெள்ளிசுத்தி யாம் ... ௱௩௭
தருஞ்சுசிசாம் பர்புளிகஞ் சந்தாம் பிரத்திற்
கிரும்புரைத்துக் காய்ச்சிடச்சுத்தி ... ௱௩௮
கழறியவன் றிச்சருவ தாதுக் களையு
மழலிடைக்காய்ச் சச்சுத்தி யாம் ... ௱௩௯
ஓட்டைகர நாய்மோந்த லோகம் விடுகவெச்சிற்
பட்டவேமப் பாத்திரந்தா னும் ... ௱௪௰
கயமருப் பிப்பிசங் கந்தர ளங்கோ
மயநீரி னாற்புனித மாம் ௱௪௧
திண்மரம்வெந் நீரதனாற் சுத்திநிந்தை சேர்ந்தக்கான்
மண்ணீரி னாற்புனித மாம் ௱௪௨
வருணமத னாற்கழுவ லாகும் புனிதஞ்
சருமம்பா சந்தழையா தி ௱௪௩
வெய்யிற்பு ரோக்கணத்தாற் சுத்திவியன் பட்டாடை
செய்யதுகிற் கம்பளா தி ௱௪௪
சிதக்கடுகி னாற்கவுசி கஞ்சுசிய ரிட்ட
மதிற்குத மாதிசுசி யாம் ௱௪௫

திரணமிலை யால்வேயாற் செய்தவைக்குச் சுத்தி
திரமுறவா டைச்சுசிபோற் செய் ... ௱சசு
சுசிநெற் கழுவ மலாதிபடிற் சோரா
சுசியுவர்மண் காரத்தாற் றூசு ... ௱சஎ
அடுத்தமிகு தண்டுலத்திற் பட்டால விட
மெடுத்தகற்றச் சுத்தியுறு மே ... ௱சஅ
விரவினெவின் மாலியம்பு ரோக்கிசுசி மேவு
மரிசிமுத லாயி னகற்று ... ... ௱சகூ
தரித்திடுகர்ப் பூராதி தாவிறுபி லாதி
யருக்கியநீ ராற்புனித மாம் ... ... ௱ருய
துப்பிக்கின் சாறுதேன் காய்ச்சிவடிக் கச்சுசியுப்
பப்பொடுகாய்ச் சச்சுத் தியாம் ... ௱ருக
பயமதுகாய்ச் சச்சுத்தி யாங்கடையின் பண்டந்
தயிர்சுசிநி ரீக்கணத் தால் ... ௱ருஉ
தோயத்தில் வார்த்தெடுக்கச் சுத்தியெச்சி லாந்தயிலந்
தோயம் வடிக்கச் சுசி ... ... ௱ருஈ
கூபத் தசுசியறு நூறுகுட நீரிறைத்தே
தாபித்தா ஊைந்தும்விடத் தான் ... ௱ருச
சத்தியத்தால் வாக்குச் சுசியசத்தி யஞ்சாற்றிற்
சுத்திவா மஞ்சதஞ்சொல் லில் ... ௱ருரு

எலிநகிலம் பூசைகிளி யேயச மாத
ரவிதொடினீற் றுணை மாம் ... ௱௫௬
நீருண லூண் பிச்சைதுயின் மூன்றின்முன் பின்சந்தியி
னீராதி நீக்கலணி நீறு ௱௫௭

ஸ்நானம் முற்றிற்று.

அநுட்டானம்.

இருந்துவடக் குப்பார்த் திறைகுருவை யெண்ணிப்
பொருந்திமோ னம்பூதி பூசு ... ௱௫௮
ஆசான்றெய் வம்வித்தை யங்கிபொல்லாப் பூமியெதிர்
நீசர்முன் னாற்றுமிடே னீறு ... ௱௫௯
நீறணிந்தா லோர்விரலோர் கையா னிலம்பார்த்துக்
கூறு ரவுரவமா கும் ௱௬௰
நணுகுவர் மாநரகி னானிலத்தி னீற்றை
யணுவளவே னும்வீழ்த்தி னார் ... ௱௬௧
பன்னிசெம்பு நீறு படங்கமண்ட லஞ்சயனந்
தன்னுடைய வாகுந் தனக்கு ... ௱௬௨
சாதனம் பூதியன்றித் தானங் கொடுப்பினுமற்
றேதுசெய்தா லும்பலமின் றே ... ௱௬௩

உன்னுமுத்தி புத்தி யுறுவருத்த ரம்பூர்வ
மென்னுந் திசைபார்த் திருந்து ... ௱௬௪
அனுமிகாங் குட்டநடு மூலமரன் கண்ணு
லெனுதறநி ரீக்கணஞ்செய் தே ... ௱௬௫
உரைத்தத் திரத்தைப் பதாகையத ஞலொண்
புரோக்கணந் தன்னைப் புரிந்து ... ௱௬௬
பாடியே யும்படந்த வத்திரத்தைப் பண்ணிடுக
தாடனந் தர்ச்சனிதன் ஞல் ... ௱௬௭
அப்பியுக்க ணந்தாழ் பதாகை வவுஷடந்தஞ்
செப்புகவ சத்திஞற் செய் ... ௱௬௮
ஆசமித்துக் கைநீ றதனைநாற் சுத்திசெய்தே
யாசகல்கற் பாதியா ஞல் ... ௱௬௯
சங்கிதையைச் சாற்றகற்ப மென்னிற் கலையைந்துஞ்
சங்கிதா மந்திரமுஞ் சாற்று ... ௱௭௰
அத்திரபீ சத்துமுடி யாதிதா ளீறுவலத்
தத்தங் கொடுதொடுநீற் ருல் ... ௱௭௧
அங்குட்டஞ் சோமத் திமைநீரி ஞற்குழைநீ
றங்குலிநீர் மற்றையதா காது ... ௱௭௨
ஒவிலீ சாஞதி யைந்தாலு முச்சிநெற்றி
தாவிலுர முந்திமுழந் தாள் ... ௱௭௩

கைத்துணைகண் டம்முதுகு காதுசத்தி யோசாத
மத்திரங்கைக் குச்சுத்தி யாய் ... ௱எச
இடையிடையி லெண்ணிநெற்றி மார்தோட் கிருமூன்
றடையவிரன் மற்றவைக்கொ ன்றாய் ... ௱எரு
திரிபுண் டரந்தரித்தீ ரெட்டிடத்தச் சேடம்
பிரமமூ லத்து முடிப்பெய்து ... ௱எசு
சிந்தும் விபூதிதா ளத்திரயஞ் செய்திதயம்
வந்ததாப் பாவியறி வால் ... ... ௱எஎ
அதிகதிரி புண்டரமே லாயுவழியு
மதிகதவம் போங்குன்றி னால் ... ௱எஅ
இதுபூதி நான மிறையா கமத்தின்
விதியறிந்த வாறுசொல்வா மேல் ... ௱எகூ
ஆசமித்து மூலநா தாந்தமறைந் தோங்குவிந்துத்
தேசமுதா லங்கநிறைத் தே ... ௱அ௰
பண்ணியிங்ஙன் மானதநா னம்படாந் தத்திரத்தா
லெண்ணுமிடக் கையிருகா லும் ... ௱அக
வலக்கரத்தை வாமகரந் தன்னாலோர் காலுந்
துலக்கமுற மேல்கீழ் துடைத்து ... ௱அஉ
வாட்டமில் லாவவுஷ டந்தசுத்தி மந்திரத்தாற்
கூட்டிக் கரங்கள் குறித்து ௱அ௩

மொழியுஞ் சிவாதன மூர்த்தியிலங் கைக்கு
ளழகுறங்குட் டங்க ளமைத்து ... ௱அச
தர்ச்சனியா லங்குட்ட மங்குட்டத் தாலந்தத்
தர்ச்சனி யாதி தமை ... ... ௱அரு
வில்லாரு மீசான் மாதிமனு வைந்துமெள்ளச்
சொல்லியே பையத் தொடு ... ௱அசு
அத்தநடு வுள்ளுகள வங்குட்டத் தானிசிக்க
வித்திபா தேகம் விபந்து ... ... ௱அஎ
சேர்த்துமத்தி மாங்குலிமூன் றும்வளைத்து மந்தஞ்சேர்
நேத்திரங் கைக்கு ணிசித்து ... ௱அஅ
அங்குட்ட மோரிரண்டு மங்கையினுக் குள்வளைத்துத்
தங்கநிசி மூலமனுத் தான் ... ... ௱அகூ
இதயாதி நான்மனுவீற் றின்னமசு வாகா
வதிகவஷட் டோடுவௌஷட் டாம் ... ௱கூ௰
அவ்வித யாதிகனிட் டாதிதர்ச்ச ஞந்தத்திற்
செவ்விரண்டங் குட்டத்தாற் சேர்த்து ... ௱கூக
சொற்றபடந் தத்திரத்தி னுற்றுலங்கங் குட்டத்திற்
றற்சனிக ளானிசிக்க தான் ... ... ௱கூஉ
வவுஷடந்த மாங்கவசத் தாற்கைசுற்றிக் கூட்டு
வவுஷடந்த மூலமனு வால் ... ... ௱கூரு

செங்கை நியாத மிதுதிகழுங் குட்டமுடன்
றங்கு மனுமிகையாற் றுன் ௱௯௪
சிரார் சிவாதனத்தாற் சேர்ந்தசிவ மூர்த்தியினு
லேரிதயந் தன்னினிசித் தே ... ௱௯௫
பேறுறுகை முட்டி பிடித்தவங் குட்டஞ்சேர்
கூறுதர்ச்ச ஞதிகளைக் கொண்டு ... ௱௯௬
சிரமாதி சானுவந்தஞ் செப்பு முறையே
திரவிசா ஞதியைந்துஞ் சேர் ... ௱௯௭
வேறிலங்குட் டஞ்சே ரனுமிகையும் வீருகக்
கூறுநடு மூவிரலுங் கொண்டு ... ௱௯௮
நிகழ்வித்தி யாதேக நேத்திரத்தை நிந்தை
யகலிதயங் கண்ணி லமைத்து ... ௱௯௯
கூடு மனுமிகையங் குட்டங் கொடுமூல
நீடுமிதயத்து நிசி ௨௱
ஏரிதய முன்மூன்றம் மூவிடத்தி லங்குட்டஞ்
சேர்கனிட்டை முன்மூன்றுற் சேர் ... ௨௱௧
தற்சனிக ளாற்களத்தைச் சுற்றித் தனநடுவீற்
றிற்கவச மெண்ணிநிசித் தே ... ௨௱௨
வலமுன் னனுமிகைக ளான்மன்னு கைக்கு
ளிலகத் திரத்தைநிசித் தே ௨௱௩

அத்ததலங் கொண்டுதா ளத்திரய மும்படந்த
வத்திரத்தாற் செய்திடுக வாய்ந்து ... ௨௱௪
சித்திர மாகச்செய் சோடிகையா லும்படந்த
வத்திரத்தாற் றிக்குபந்த னம் ... ௨௱௫
வந்தவவ குண்டனமா முத்திரையைச் செய்வவுஷ
டந்த கவசமூலத் தால் ௨௱௬
அடியாதி சென்னியந்த மத்தங் களினற்
றொடுதன்மா முத்திரையாய்ச் சொல் ... ௨௱௭
அங்க நியாத மிதுமார்ச் சனமதனைப்
புங்கமுறச் சொல்வாமிப் போது ௨௱௮
தகையாருஞ் சங்கிதா மந்திரத்தைச் சாற்றிப்
பகர்பிரா ணயாமம் பண் ௨௱௯
விந்தமுத மேவங் குசமுத் திரைவவுஷ
டந்தவித யத்தாற்கொண் டாய்ந்து ... ௨௧௰
அப்புவில்வைத் தேமூலத் தாக்கிச் சிவதீர்த்தந்
திக்குபந்த ஞதிகள்செய் தே ... ௨௧௧
நாலுமுக மெண்க ணவில்செபஞ்சி ருக்குவல
மேலுகர கந்தன் டிடம் ௨௧௨
முந்நூல்செவ் வாடைதனுப் பூண்முதி ராவிளமை
பன்னமேற்பத்மா சனம் ௨௧௩

உடையவளாய்ச் சாத்துவித முற்றவ ளாகிச்
சடையார் பிராமி தனை ... . உகச
காலையில்வானத் துடிவிளங்குங் காலிதயப்
பாலிற் பணிக பரிந்து ... . உகரு
தருணமிரு கண்ணோர் முகமபயந் தண்டோர்
வருவலஞ்சங் காழிவா மம் .... உகசு
வெண்ணிறந் தூசு துழாய் முந் நூன்மின் பூண்கலுழன்
றன்மேற் பதுமா சனம் ... . உகஎ
சேர்ந்த விராசத மார்திருவை யுச்சிப்போ
தோர்ந்து புருவநடு வுன் .... உகஅ
ஓருமுகமுக் கண்வலப்பா லுற்றசெபஞ் சூல
மருவபயஞ் சத்திவா மம் ... . உககூ
பிதிரமுகு நீனிறம்பின் னற்பிறைவெண் பெற்ற
மதன்மேற் பதுமா சனம் உஉ௦
ஆருயிர்க டோறு மணைதா மதகுணந்தான்
சாரும் ரவுத்திரிதன் னை ... . உஉக
ஒண்பிரம ரந்திரத்தின் றாழ்ப்புறம்பி லோர்பாதி
மண்டிலந்தோன் றந்தியில்வந் தி .... உஉஉ
இவர்மூ வருஞ்செயற்குச் சான்றின ரென்றே
யவரொளி மண்டலத்த டங்கு ... உஉங

நல்லநா லாஞ்சந்தி சத்தியுரு நாடுகுண
மல்லா தெனுகவெணி யே உ௨௪
தீர்த்தம் வலக்கையாற் சேர்த்திடக்கை மேல்வலக்கை
சார்த்திச் சொலிச்சங் கிதை உ௨௫
வரவௌஷ டந்தமூ லத்தாற் குடமுத்
திரையான் முடியிற் றெளித்து ... உ௨௬
பின்னுமந்நீர் சங்கிதையைப் பேசியெடுத் திடக்கை
தன்னிடைவைத் தேவீழ் சலம் ... உ௨௭
அதிவௌஷ டந்தவஞ்சா லாறுற் புரோக்கிப்
பதுமார்ச் சனமென் பது ... உ௨௮
இடக்கரத்திற் சேடித்த நீர்வலக்கை யேந்தித்
தடித்தவற மாய்நினைந்து தான் ... உ௨௯
இடநாசி யாற்புகுந்து பாவமரித் தேமை
யடைகுழம்பாய் நாசிவலத் தால் ... உ௩௰
வீழ்வ தெனவெண்ணி யும்படந்த வத்திரத்தாற்
றாழ்புருவத் தின்னெரியாற் றுன் ... உ௩௧
வலப்பா லெரிவருண வச்சிரக்கன் மீதவ்
வலக்கைநீ ருய்க்க மகிழ்ந்து உ௩௨
அகமருட ணம்மீதப் பாலா சமித்தே
சகளீ சரணஞ் சமைத்து உ௩௩

கவசத்தி னீராற் றனைச்சூழ்ந் தினன்பாற்
சிவனைத் தியானித்தல் செய்து ... ௨௩௪
பூசையுடன்கா யத்திரியு மூலமுங் கூறி
பிசையமும்முக் காற்றர்ப்பித் தே ... ௨௩௫
பேசியவை பத்துருவெவ் வேறுபின் றங்கிதையைப்
பேசியோர் காற்றர்ப்பித் தே ... ௨௩௬
கணபதிகந் தன்கவுரி மந்திரங்க ளாற்றர்ப்
பணமொவ்வோர் கான்முறையே பண் ... ௨௩௭
வாணிலவுஞ் சூரியன்றன் மந்திரத்தி னுன்முக்காற்
பாணியினாற் செய்தர்ப் பணம் ... ௨௩௮
மந்திரந் தேவர் மனுவாற் கர நுதியாற்
பந்தமற வோர்காற்றர்ப் பித்து ... ௨௩௯
இருடி களுக்கங் குலியிறையான் மக்கட்
கருகங் கனிட்டையடி யால் ... ௨௪௰
பூதங்க ளுக்குமணிக் கட்டாற் பொலிபிதா
மாதா விவர்க டமக்கு ௨௪௧
ஞாதிகளா சானிவர்க்குத் தர்ச்சனியங் குட்டநடு
வோதொருகாற் றர்ப்பியெள்ளோ டும் ௨௪௨
மந்திரங்கட் குச்சுவா காந்தந்தே வர்க்குமதே .
முந்திருடி கட்குநமோந் தம் ... ௨௪௩

மனுஷர் வஷட்பூதம் வாய்த்த வௌஷட்டா
மினிய பிதிரா தியர்க்கு ... உசச
பேசுசுவ தாவாம்பின் னும்வேவ் டுவதர்ப்பித்
தாசமித்துச் செய்துநியா தம் ... உசரு
குறைபிரா சாதத்தாற் கோலமுத்தி ரையா
லுறைவிந் தமுதாங் கொடுக்கு ... உசசூ
அலரிக்கண் சங்கிதையி னுலரனைத் தாழ்ந்தே
சிலமூலஞ் செப்பிநிவே தி ... உசஎ
சந்தியொன்று தற்காலங் தப்பிச் செயிற்பதினேர்
மந்திரஞ்சொல் பாவ மறும் ... உசஅ
ஏதமிலோர் சந்தி தவறியிடிற் சத்தியோ
சாதமெணிச் சாற்று சதம் ... உசகூ
மூன்றுசந்தி தப்பிலுரை முந்நூறு காமத்தே
லான்றவுப வாசமுஞ்செ யன்று ... உருய
ஈரிரு சந்திக் கிருநூ றறைகபன்னு
ளேராருஞ் சந்திதவ றில் ... உருக
ஓரா யிரமுரைக்க நோயுற்றார் நோயற்று
ரீரயுதத் தைப்பசியுற் றே ... உருஉ
ஆவலினே மத்தோ டபிடேகத் தோடுமிகு
பாவ மொழியப் பகர் .... உருந

அனுட்டானம் முற்றிற்று.

சூரியபூசை.

அத்திரக் கூடடைந்து மாயாந்த முப்பத்தோர்
தத்துவநெஞ் சாற்கடந்து தான் .... உருச
பூசையிடஞ் சுத்தவித்தை யாயெண்ணி நற்பொருளோ
டேசறுபூர் வம்பார்த் திருந்து ... உருரு
துய்யவத்திரத்தாற்கை சோதித்து வெளஷடந்த
செய்யவன்மூ லத்தாற்கை சேர் ... உருசு
பெருவிரற்பாற் றர்ச்சனிக ளாற்பே ணிதய
மருவ நிசிக்க மகிழ்ந்து ... உருஎ
பெருவிரலாற் பேசுகனிட் டாதிமூன் றின்பாற்
சிரசு சிகைகவசஞ் சேர்த்து ... உருஅ
தர்ச்சனிக்க ணங்குட்டத் தாலத் திரநிசிகை
சுற்றுகவ சத்தைச் சொலி ... உருசூ
அத்தம் வவுஷடந்த மூலத்தாற் கூட்டிடுக
வத்த நியாதமிது வாம் .... உசும
தேகசுத்தி மூலத்தாற் செய்பின் பெருவிரலோ
டாகுங்க னிட்டைமுன்மூன் றால் ... உசுக
இதயஞ் சிரசுசிகை யின்க ணிசிக்க
விதயஞ் சிரசுசிகை யே ... உசுஉ

தற்சனிக ளாற்களத்தைச் சுற்றித் தனநடுவிற்
றிற்கவச மெண்ணிநிசித் தே ... ௨௬௩

நேத்திரங்க ளின்மத் திமைதாச் சனிகளா
னேத்திரங் கூறி நிசி ... ௨௬௪

அத்த தலத்தி லனுமிகைக ளானிசிக்க
வத்திர மாமந் திரம் ... ௨௬௫

அத்திரத்தாற் சோடிகையா லைபிரு திக்கினு
மத்திக்கு பந்தன மாக்கு ... ௨௬௬

மெய்யெங்கு மாகி விளங்குமூ லத்தினாற்
செய்க மகாமுத் திரை ... ௨௬௭

சூரியனு கத்தன் சொரூபம்பா வித்துப்பின்
சீருண பாத்திரத் தில் ... ௨௬௮

அரக்கல ராதியுறு நீர்முழுந்தா னூன்றிச்
சிரத்தளவு செல்லவெடுத் தே ... ௨௬௯

செப்பிமூ லந்தரிச னர்க்கிய மீந்ததற்பின்
செப்புகவம் மூலஞ் சில ... ௨௭௰

இலாடநடுச் செம்மைவிந்து வின்னின் றிழியு
நிலாவமுத மாக நினைந்து ... ௨௭௧

அத்திரத்தாற் சோதித்த பாத்திரத்தி னிற்கடோர்க்
கத்திநிறை கந்தோதகம் ... ௨௭௨

அதனிற் சடங்கமூ லத்தாலர்ச் சித்தே
கதிரத் திரங்கவசத் தால் ... ௨௭௩
திக்குபந்த னத்தொடவ குண்டனஞ் செய்கவான்
முத்திரைமூ லத்தான் முயன்று ௨௭௪
அந்நீர்கொண் டத்திரத்தி னூற்பொருளைத் தன்னைநிலந்
தன்னைப்பு ரோக்கித்துத் தான் ... ௨௭௫
அத்திரத்தோர் பூப்பூசைத் தானத்திற் போட்டிடையூ
றத்தனையும் போக வறுத்து ௨௭௬
செம்பா தியிலன்றித் தண்டுலத்திற் செய்தவெண்டோட்
டம்புயத்தர்ச் சிக்க வறிந்து ... ௨௭௭
தடமார் துவாரவலந் தண்டிதனைச் சாத்தி
யிடம்பிங் கலனைச்சாத் தி ... ௨௭௮
வாசநளி னத்துக்கீ சத்தோர் மருப்பனைச்சாத்
தாசானைச் சாத்தழற்றிக் கின் ... ௨௭௯
போதுநடு விற்பிரபூ தாசனம்பூ சித்தங்கி
யாதியினூற் சிங்கங்க ளாம் ... ௨௮௰
அருள்விம லன்சார ஞாராத் தியனைப்
பரமசுக னைப்பூசை பண் ... ௨௮௧
அதன்மீது வெண்பதும மர்ச்சித்துப் பூர்வ
மதுமுதலீ சானமீ ருய் ... ௨௮௨

கேசரங்க ளிற்றீப்தை சூக்குமைகே மூர்சனை
வீசுபத்தி ரைவிபூத் தி ... ௨௮௩

விமலே யமோகையுடன் வித்துதையெண் சத்தி
யமல முறச்சாத் தமர்ந்து ... ௨௮௪

ஆயசர்வ தோமுகியைக் கன்னிகையீ சத்தருச்சித்
தீவிப் புரமுத் திரை ... ௨௮௫

நாப்பணர்க் காசனமர்ச் சித்ததிற்செம் மண்டலநன்
ஞப்பண்ணில் வெண்ணளினத் தில் ... ௨௮௬

இருக்கின்ற தாயிலங்கு தண்மா துளம்பூ
வருத்தங்கு மேனி யுடன் ... ௨௮௭

இருபுயம் பற்றிருவெண் கஞ்சமிரு கையோ
டொருமுகங் கண்களுக ளம் ௨௮௮

கயமார்செந் தூசினதாய்க் காண்கடோர்க்கஞ் சேர்சூ
ரியமூர்த்தி யானிசிமூர்த் தி ... ௨௮௯

இணையகலு நேத்திரத்தா னேத்திர மீந்தே
யிணரஞ் சலியைநிறைத் தே ... ௨௯௦

நெற்றியில் வாங்கு நிகழருண விந்துவைப்போ
துற்றவஞ்ச லிக்கு ளுனி ௨௯௧

உதவிதயத் தான்மூர்த்தி யெங்குமுற வென்றா
ழிதயத்தா வாகி யிசைந்து ... ௨௯௨

---

* கண்டுகடோர்க்கசூ பாடபேதம்

தாபனஞ் சன்னிதா னஞ்சன்னி ரோதனமுந்
தாபமக லப்புரிக தான் ... ௨௯௩
உதவிவிம்ப முத்திரையென் றாழி னுடைய
விதயாதி யத்தானத் தில் ... ௨௯௪
இதயாதி மந்திரங்க ளானிசித்தே மூல
மதனுலேகத்துவ மாக்கு ... ௨௯௫
செய்க தசதிக் கினுந்திக்கு பந்தனமுஞ்
செய்கவவ குண்டனமுந் தேர்ந்து ... ௨௯௬
அமுதமெனு முத்திரைமா முத்திரையு மாக்கு
திமிராரி மூலத்தி னால் ... ௨௯௭
நமச்சு வதச்சுவா காந்த நனுக
வமைத்த கடோர்க்கமனு வால் ... ௨௯௮
பாத்தியமுன் னீவௌஷ டந்தமூ லம்பகர்ந்தே
சாத்தறுகு பூத்தண்டு லம் ... ௨௯௯
கடோர்க்கத்தாற் கந்ததயிலாதி கைக்கொண்
டடுத்த வுளத்தொடு மாட்டு ... ௩௦௦
அரத்தவுடை சாத்தி யணிந்து கந்தாதி
யாத்த வுருவன் றனை ... ௩௦௧
அர்ச்சித்து மூலத்தாற் புட்பாஞ் சலித்திரய
மர்க்கியமு மீகவன்பி னால் ௩௦௨

பதுமவிப்ப முத்திரைக ளீய்ந்து பரிந்தே
யிதமொடிலை யாங்கமர்ச்சித் தே ... ௩௱௩
பூசித்துப் போகாங்க பூசைப் பொருட்டிரந்து
பேசற் றனுமதிபெற் றே ... ௩௱௪
இதய முதனுன் கிடத்தினின்று மந்த
விதயமுத னுன்கையும்வாங் கி ... ௩௱௫
கொதிதழலீ சன்னிருதி வாயுகோ ணந்தொட்
டிதயமுத னுன்கையுஞ்சாத் தி ... ௩௱௬
கதிரவன்முன் னேத்திரஞ்சாத் திக்கீழ்த்திக் காதி
யிதழ்நான்கி லத்திரஞ் சாத் தி ... ௩௱௭
இதயாதிக் கான்முத் திரைநேத் திரமாம்
அதனுக்குச் சோவிடா ணம் ... ௩௱௮
ஈந்து திராசனி முத்திரையை யத்திரத்திற்
கீந்துபூர் வாதிநான் கின் ... ௩௱௯
இதழ்நுதியிற் சாத்திந்து புந்தி பிரகற்
பதிசுக் கிரனைப் பரிந்து ... ௩௱௰
அனன்முதனூற் றெட்டினுதி யங்கா ரகனைச்
சனிராகு கேதுவைச்சாத் தி ... ௩௰௧
ஈந்து நமக்கார முத்திரையை யிங்கிவர்கட்
கீந்துடுக வாய்ந்தவர்க்கி யம் ௩௰௨

சூரியனுக் குத்தூப தீபனை வேத்தியந்தூ
நீரடைக் காய்தார்ப்ப ணம் ... ௧௰௩
சத்திர சாமரநல் லாசமன மர்க்கியத்தோ
டொப்பி னுபவிதயத் தால் ... ௧௰௪
மூலஞ் சிலகூறி யர்க்கியநன் னீரினொடு
மூலத்தா லீகவென் றாழ் முன் ... ௧௰௫
அங்கங்கட் குந்தசத்தி லொன்று செபித்தளித்துப்
பங்கமற வேத்திப் பணிந்து ... ௧௰௬
ஆய்ந்தகடோர்க் கத்தாற் பராமுக வர்க்கியத்தை
யீந்தென் பிழைபொறுப்பா யென்று ... ௧௰௭
உம்படந்த வத்திரநா ராசவுயர் முத்திரையால்
அங்கமனு வாதியெழுப் பாய்ந்து ... ௧௰௮
சுத்தகடோர்க் கச்சூ ரியமூர்த்தி யாற்றிவ்ய
முத்திரையால் யோசியினன் முன் ... ௧௰௯
பன்னிதயப் போதிற் சிவவருணன் பான்மூலந்
தன்னு லொடுக்கவனைத் தான் ... ௧௨௰
வளர்தேச சண்டனையீ சானத்திற் சாத்தி
யொளிர்மா லியமீந் தொடுக்கு ... ௧௨௧

சூரிய பூசை முற்றிற்று.

சிவ பூசை.

ஆசமனஞ் செய்துசக ளீகரணஞ் செய்துவெண்ணீ
றுசகலுங் கண்டி யணிந்து ... ௩௨௨
வந்தத் திரசுசிசெய் தேபாத் திரம்வஷ
டந்தவித யத்தாற்பூ ரித்து ... ௩௨௩
ஏழ்காலோங் காரமர்ச்சி சாமானி யார்க்கியத்தை
யேழ்கா லபிமந் திரி ... ௩௨௪
வான்றிக்கு பந்தனஞ்சீர் மன்னுமவ குண்டனஞ்செய்
தான்முத் திரையு மளித்து ... ௩௨௫
அதன்மேற் றுவாரமத்தி ரத்தாற் புரோக்கி
விதிவாசன் மேற்படியின் மேல் ... ௩௨௬
தென்பாற் கயமுகன்வாக் காள்வடபா னற்செய்யா
ளன்பா னடுவுறச்சாத் தாங்கு ... ௩௨௭
தனக்குத்தென் சாகை தனினந்தி நந்தி
தனக்கு வடபா றனில் ... ௩௨௮
கங்கை யிதற்குவட சாகையின்மா காளனைச்சாத்
தங்கவன்றென் பால்யமுனை யாம் ... ௩௨௯
அரிதே லனைவரையுங் கூட்டியருச் சித்தே
யுரைசெய் நிரீக்கணத் தோடு ... ௩௩௰

நிசிக்குழு லஞ்சேரு நேத்திரத்தான் மேல்பார்த்
தசைத்தவின் விக்கின மும். ... ௩௩௧

நறுமலர்சேர் நாராச முத்திரைசே ருப்பட்
டிறுதியத் திரத்தா லிடை ... ௩௩௨

விக்கினமும் பாசுப தாத்திரஞ்சேர் மெய்வலைத்தா
டக்குமுத் தாடனத் தால் ... ௩௩௩

இருநில விக்கினமு மென்றெங்கு நின்ற
திரிதல விக்கினமுந் தீர்த்து ... ௩௩௪

சீலமார் கீழ்ப்படி நாப் பண்ணத் திரத்துவார
பாலன் றனைப்பூசை பண் ... ௩௩௫

வாத்து பதியைமணிக் கர்ப்பக் கிரகத்துட்
சாத்து நிருதி தனில் ... ௩௩௬

சுத்திநான் குற்றகும் பந்தோய வத்திரத்தை
யத்திரநீ ராற்சுத்தி யாக்கு ... ௩௩௭

பதநீர் வெயிற்படாப் பாணிமுத னீர்
விதமன்றி நன்னீர் விழைந்து ... ௩௩௮

இதயத்தி னல்வடித் தேனைப் பொருளும்
விதிமுறைபாங் காகவைத்து மேல் ... ௩௩௯

மண்டுக்கங் கன்னேய் திரண மொளிமாய்க்கும்
எண்மூங்கி லொற்கமகற் றீங்கு ... ௩௪௰

புலிச்சரும முத்தியா மாடைபிணி போக்குங்
கலைச்சரும ஞானசித்தி காண் ... ௩௪௧

சம்பளங் துக்கங் களையு *மிவற்றொன் றிற்
சம்புவின்றென் பாலிருந்து தான் ... ௩௪௨

பூசை யிடமத் திரப்புரிசைக் குட்கவசத்
தாசிலவ குண்டனத்து ளாக்கு ... ௩௪௩

கோதில் சரநியாதஞ் செய்துபதாங் குட்டமுதல்
ஆதார மட்டுமிரண் டாய் ... ௩௪௪

உச்சியள வாயோ ருருவா யிதயமுத
லுச்சியந்த மைஞ்சிடத்தி னும் ... ௩௪௫

இடையிங் கலையினுற் பின்னலுற்றுக் கீழ்நோக்
குடையகஞ்ச மொட்டைந் தொடும் ... ௩௪௬

துவாரத்தி னேடுஞ் சுழுமுனைபா வித்தத்
துவாரத்துள் ளும்புறத்தி னும் ... ௩௪௭

புத்தமு தத்தைப் பொழிபரா காசமயச்
சத்தியைச்சிந் தித்துநெஞ்சிற் றூன் ... ௩௪௮

ஊங்கார மானதித யத்தொலிப்ப தாகவுன்னி
வாங்கி வளியுண் மறித்து ... ௩௪௯

வழுக்கிலுங் காரத்திற் சித்தத்தை வைத்தே
யெழுப்பிவளி மேனோக்க வே ... ௩௫௰

---

* 'மிவற்றிலொன்று' பாடபேதம்.

அம்புயமொட் டைந்தலர்ந்து மேனோக்கச் சோடிகையால்
உம்படென்றைங் காற்றெறித் துற்று ... ௩௫௧
வாயு வலத்துவிடுத் துப்பூரித் துக்கும்பித்
தேயுமித யக்கமலத் தில் ... ௩௫௨
வீங்கொளிவான் மீன்போலு மம்மெனெழுத் தாமணுவை
யூங்காரத் துச்சி யுற ... ௩௫௩
கான்மே லெழுப்பிச்சங் காரமா முத்திரையா
லான்மாவை யான்மமனு வால் ... ௩௫௪
துவாதசாந் தத்தரன்பாற் கூட்டியின்பந் துய்க்க
வவாவுறுவா னாக வறிந்து ... ௩௫௫
சத்தப் பரிசமயன் பாலிரத மாறன்பான்
மெத்துருவங் கந்த மிவை ... ௩௫௬
உருத்திரன்பாற் புந்தியாங் காரமுன்னீ சன்பாற்
பரிக்குமனம் விந்தைமுகன் பால் ... ௩௫௭
ஐவ ரிடத்து மறைந்த முறையொடுங்கச்
செய்வதுடற் சூக்குமசுத் தி ... ௩௫௮
பீத மூரம்வச் சிரம்லா மெனும்பீசம்
ஓதுசத்தி யோசாதத் தோடு ... ௩௫௯
பிரம னிவர்த்திகலை நாற்கோணம் பெற்ற
வுருவார் பிருதிவியை யும் ... ௩௬௰

வெண்மை நெகிழ்ச்சி பதுமமுவீ மென்பீசம்
வெண்மையுரு வாம மனு ... ௩௬௧
வெற்றியமர் மால்பிரதிட்டை வெண்மதியின் பாதியுரு
வுற்றவப்பு மண்டலத்தை யும் ... ௩௬௨
செம்மை சுவத்தி யுருமெனெழுத்தகோரம்
வெம்மை யுருத்திரன்வித்தை ... ௩௬௩
உறுமுக்கோணத்தே யுவையுங் கருமை
யறுவிந்தைம் மென்னும்பீசம் ... ௩௬௪
புருடமீ சன்சாந்தி பொற்பிருமுக் கோண
மருவொலிவையு மபுகைவன்னம் ... ௩௬௫
சிதாமிர்த விந்துவளவா மென்னெழுத்தீ சானஞ்
சதாசிவஞ் சாந்தியதீதை ... ௩௬௬
வட்டம் வெறுவெளியை யும்முடக்க மிணங்குமா
யிட்டமுற வெவ்வேவ நிறணீ ... ௩௬௭
வாங்கியிடை பாண்மறித்து மேமேனுக்கிப் பிங்கலையா
லோங்கி விடும்போதொலி ... ௩௬௮
அருத்தி நிவர்த்தியிலா மென்னுமெழுத் தைங்கா
லுரைத்துமணி லிங்குணத்தை யோட்டு ... ௩௬௯
நறும்பிர திட்டையுவீ மென்னெழுத்தை நாற்கா
லறைந்துநீர்க் கண்ணுன் கறு ... ௩௭௰

விளங்குவித்தை தன்னினுரு மென்னெழுத்தை முக்காற்
கிளந்தனற்கண் மூன்றுங் கெடு ... ௧௭௧
சாந்திதனி லேம்மென் னெழுத்திரு காற்சாற்றி
வாய்ந்தவளிக் கண்ணிரண்டு மாற்று ... ௧௭௨
சாந்திய தீதை தனிலெல்லா மென்பதுரைத்
தோர்ந்தொழிக்க வான்குணமொன் றும் ... ௧௭௩
தம்பநிவிர்த் தாதி தனித்தனிகூ றும்போதி
லும்படந்த மங்கவைவயென் றோர் ... ௧௭௪
மாநிலமுன் னைந்திணையும் வாயுத்தேயுப் புனன்மண்
ணுனபரா காசத் தடர்த்து ... ௧௭௫
அவையவை யின்வடிவா யாக்கையைச்சிந் தித்தே
நவையிலத்தி ரத்தை நவின்று ... ௧௭௬
வலக்காற் பெருவிரலில் வந்த கனலாற்
றொலைத்துடலிற் குற்றமனைத் தும் ... ௧௭௭
சத்தியமு தத்துட் புறம்புநனைத் தாக்கையினைச்
சித்த மெனும்பதுமத் தில் ... ௧௭௮
முக்கலையோங் கார மொழிந்ததனுற் சுத்தவித்தை
மிக்கதவி சாக்கியதன் மேல் ... ௧௭௯
ஓங்குநான் கார்கலையோங் காரத் திலயத்தும்
வாங்கியுடற் சூக்சமத்தை வைத்து ... ௧௮௰

அதிலெங் கலைப்பிரண வத்தொ டானால்
அதினுரைக்கு மான்மமனு வால் ... ௬அக
அதிற்பூர கத்தாற் றுவாதசாந் தத்தும்
பிரித்தணுவை வைத்ததற்குப் பின் ... ௬அஉ
சுபமாம் வௌஷடந்த சத்திமனுச் சொல்லி
யபிஷேகி விந்தமுதத் தால் ... ௬அ௩
அங்கநியா தஞ்செயிலை பூதசுத்தி யாகுநலந்
தங்கு மிதயந் தனில் ... ௬அச
சோதிலிங் கத்திற் றுவாதசாந் தத்தினின்று
மாதிதனை யரவாகித் து .... ௬அரு
அலராதி யாற்புறம்போ லர்ச்சித்து நாபி
நிலைபெறுங் குண்டத் தினில் ... ௬அ௬
வன்னியின்ஞா ஞக்கினியை வைத்துமலி விந்தமுதான்
மன்னுபுறம் போற்புரிந்தோ மம் ... ௬அஎ
வேள்வி யுதிக்கு மிகுபயனை வேட்கையுடன்
றூழ்வி லராற்களித்துத் தான் ... ௬அஅ
விந்துத்தா னந்நடுநோர் மிச்க சிவனையுன்னி
வந்துபுறப் பூசைகொள்வ தற்கு ... ௬அகூ
அனுமதிகொ ளந்தரியா கந்தானு மாயில்
இனியவுயிர்ச் சுத்திபதா மே ... ௬கூ௦

செய்துதா ளத்திரய முந்திக்கு பந்தனமுஞ்
செய்திடையூ றுனதறுத் தே ... ௩௯௧
அங்கிநிற மாமதத் திரமதி லுங்கவசத்
தங்கைவலத் தர்ச்சனியி னால் ... ௩௯௨
சுற்றியகழ் மூன்றுமுன்னித் தூயசத்தி மந்திரத்தா
னற்றேனு முத்திரையி னால் ... ௩௯௩
ஈனமில்சத் திக்குழமேல் கீழுநிறை வாகவெண்ணித்
தானசுத்தி யைப்புரிக தான் ... ௩௯௪
அரும்பாத் தியமாதி முப்பாத்தி ரத்தைத்
திருந்தத் திரசுத்தி செய்து ... ௩௯௫
விந்தமுத மாகநிறை நீரை விளங்குமெளஷ
டந்த விதயமத னால் ... ௩௯௬
நந்தாநா லாறெண் டிரவியமின் றேனறும்பூச்
சந்தறுகு தண்டுல மிட்டு ... ௩௯௭
பாத்தியத்தை யங்கத்தாற் பண்ணு பிரமாங்கத்
தாற்றிடுக வாசமனத் தை ... ௩௯௮
உரித்தா மருக்கியத்தை யாசனமொண் மூர்த்தி
யருத்தியுட னேந்துபிர மம் ... ௩௯௯
வித்தியா தேகம் வியனேத் திரமூலஞ்
சுத்தவித யஞ்சிர சு ... ௪௱

சிகைகவச மத்திரமூ லஞ்செப்பிச் செங்கே
னுகுமலரா லர்ச்சித் துடன் ... சாக
திக்குபந்த னத்தொட்டவ குண்டனஞ்செய் தேதேனு
முத்திரையு மீந்து முறை .... சாஉ
மருவருக்கி யத்தத்தி ரத்தாற் றணைவான்
றிரவியத்தி னைச்சுசிசெய் தே ... சாங
அப்பியுக்க ணங்கவசத் தானுமபி மந்திரித்தல்
செப்பிதயத் துஞ்செறிவித் தே ... சாச
அவகுண் டனம்புரிந்தான் முத்திரையிந் தர்க்க
நவையறுநீ ரிற்பூ நணைத்து ... சாரு
மஞ்சனகும் பத்திட்டான் முத்திரைவாய்ப் பக்கொடுக்க
வெஞ்சாத்-திரவியசுத் தி ... சாசு
உன்னு சனத்திற் சிவாதன முன்மார்பின்
முன்னுசிவ மூர்த்தி மொழிந்து ... சாஎ
சாத்திச் செழுஞ்சந் தனத்திலத மிட்டுப்பூச்
சாத்திமூ லத்தாற் றலை ... சாஅ
அரன்மயந்தா னுகி யிருசுவந் தீர்க்க
மொருவாப் புனுத முற .... சாகூ
ஓங்கார மாதி நமோந்த முறமனுக்கள்
பாங்காகப் பையப் பகர்ந்து .... சகய

மந்திர சுத்திசெய்து மஞ்சன வேதிகையிற்
சந்தக் கலைவிரித்துத் தான் .... சயக

அங்கத னுப்ப னனந்தனைச் சாத்திடுக
வங்கிமுன்னுற் கோணமவை யில் ... சயஉ

அர்ச்சி தருமமொடு ஞானவை ராக்கியத்தை
யர்ச்சி யைசொரியத் தை ... சயங

ஓது பதுமமேற் சாத்துறுப் பாறினுய
ரீதுசடுத் தாசனமா மே ... சயச

இருத்தி யதிலிலிங்க மாசன மூர்த்தி
திருத்தமா மூலத்தி னல் ... சயரு

வர்ச்சித்து நேத்திரத்தை மற்றையங்கத் தாலெண்பூ
வர்ச்சித் தளித்தருக்கி யம் ... சயசு

ஈந்துதூ பந்திபம் பூவையத்தி ரக்திறக்கி
யாய்ந்ததண்டிக் கீசத் தமை ... சயஎ

ஆட்டிநீ ரெண்ணெமாக் காப்புமஞ்ச ளாதிநெல்லி
யாட் டியாறற் குக்கெளவி யம் ... சயஅ

பஞ்சாமிர் தத்தைப் பரிந்தபிமே கித்தானெய்
பிஞ்சுமதி யார்க்காட்டிப் பின் ... சயகூ

இளவெந்நீ ராட்டி யிடிதிமிர்ந்து வில்வம்
வெளியகர்ப்பூ ரந்திமிர்ந்து மேல் ன சஉய

செழும்பா றயிர்தேன் றெளிகருப்பஞ் சாறு
கொழும்பல் கனிச்சாறு கொண்டு ... சஉக
அரற்கனை வமு லத்தாட்டி யாட்டி யிளநீர்
மருப்பூவர்ச் சித்துவிடா மல் ... சஉஉ
இடையிடைநீ ராட்டியளித் தேதூப தீபஞ்
சடைமுடியார்க் கட்டபுட்பஞ் சாத்து ... சஉங
தங்குதுச்சுப் புற்கவசத் தாற்சாத்தி மூலத்தா
லங்காற் பதாகையினா லாட்டு ... சஉச
பதினொருமா மந்திரம் பன்னுபு நீர்முன்
விதியினா லாட்டு விழைந்து ... சஉரு
மேய வியோம வியாபிமுத லாமனுவா
லாயிரந்தா ரைப்புன லாட்டு ... சஉசு
தண்கந்த மார்நீரை வேண்டளவுந் தானாட்டித்
தண்சந் தனக்குழம்பு சாத்து ... சஉஎ
நவகலச மாட்டிபந்தத் தில்லர்க் கியநீர்
அவமிலித யத்தினா லாட்டு ... சஉஅ
சாத்தியொற் றுடைபீ டத்திருத்தியோர் தண்பூச்
சாத்திலிங்க சுத்தியாந் தான் ... சஉகூ
ஐங்கரனை வாயுதிக்கி லான திருவடக்கிற்
றங்கியிடத் தென்முகமாச் சாத்து ... சஙய

செப்புஞ் சதாசிவா னந்தர்சி கண்டகுரு
வொப்பிலம்பி காகுரு வோடு ... ௪௩௧
கந்தர்வின் டுப்பிரம ரைக்கருதீ சானதிசக்கில்
அந்தவா றர்ச்சித்தன் பால் ... ௪௩௨
ஆதிபீ டத்தின்கீ ழாக நடுவினிற்சாத்
தாதார சத்தி யறைந்து ... ௪௩௩
சாத்தும் பிரமசிலை மேலனந் தாசனத்தைச்
சாத்தனந்தன் றன்னைபதிற் றுன் ... ௪௩௪
மீதான்முக் கோணவனந் தாசன மேலெரிதா
ஞதிநாற் கோணமமை யில் ... ௪௩௫
சாத்திடுக தன்மாதி நான்கு மதன்மாதி
சாத்துகபூர் வாதிதிக்கிற் றுன் ... ௪௩௬
சொலுமதற்கு மேற்பீடத் திற்றாய மென்மே
கலைக்கீழ் நிருதிதிசைக் கண் ... ௪௩௭
சாத்திட தச்சதனத் தையதன்மே லீசதிக்கிற்
சாத்துர்த்து வச்சதனத் தை ... ௪௩௮
இதுசதுரச் சிங்கா தனமத னுப்பண்
புதுமையுறு கந்தம் பூசித்து ... ௪௩௯
வளர்பீச மங்குரநா ளஞ்சாத்தி மற்றைத்
தளங்கல்வ பத்திரத்திற் சாத்து ... ௪௪௰

அத்தலமூ லத்திற்பீ டத்திற்கு மேலாகச்
சித்திரக் கேசரஞ்சாத் தி ... சசக
வாய்த்தபீ டத்துன் னதமாக மத்தியத்திற்
சாத்திடுக கன்னிகைபீ சம் ... சசஉ
பன்மை யுறுப்புறுபத் மாசனஞ் சாத்தியுன்னி
யெண்கோண வாசனமீ தோர் ... சசங
கேசரத்திற் கீழ்த்திசை யாதியி சானமந்த
மாசற்ற வாமைசேட் டை ... சசச
இரவுத் திரிகாளி யேரார் கலவி
கரணி பெலவிகர ணி ... சசரு
பேசு பெலப்பிரம தன்னிப்பேர்ச் சத்தியுட
னேசருவ பூததம னி ... சசசா
சாத்திலிங்க மூலத்திற் கன்னிகையி சானத்திற்
சாத்து மனோன்மனியைத் தான் .... சசஎ
ஒப்பிகந்த வட்டமுறும் பத்மா சனமுபர் நூல்
செப்பிடுமீ தென்றே தெளி ... சசஅ
இதழ்நுதிவட் டத்திரவி மண்டலமு மீதிற்
கதிபதியாம் வேதனைச்சாத் தாய்ந்து ... சசகூ
கேசரவட் டாக்கிரத்தி லிந்துமண்ட லம்மா
லேதி லதிபதிசாத் தி ... சருய

கன்னிகைவட் டத்தினுதி வன்னிமண்ட லங்கருத்தா
வென்னு முருத்திரற்சாத் தி ... சருக

கன்னிநாப் பண்சத்தி மண்டலத்தி னேக்கருத்தா
வென்னு மகேசனேச்சாத் தி ... சருஉ

தவாவறு கோணவிம லாசனமீ திங்ஙன்
சிவாதனம்பா வித்திதிற்சாத் தி ... சருங

புலிங்க வழற்றம்பம் போன்றசிவ மூர்த்தி
யிலிங்கவட் டத்திற்சாத் தி ... சருச

சிரமாதி பாதாந்தந் தெண்டபங்கி தன்னுற்
றிரவீசா னுதிநிசித் தே ... சருரு

இலங்கீசா னுதிமுடிக் கண்ணம் மனுவால்
அலங்குமுண்ட பங்கி யமைத்து ... சருசு

படிகநிறம் பீதங் கருமைபகர் சோணம்
வடிவாகும் வெண்மைநிற மாம் ... சருஎ

வத்திரமீ சானம் புருடமகோ ரம்வாமஞ்
சத்தியோ சாதமுகஞ் சார்ந்து ... சருஅ

இந்தார் சடைமுடியைந் தைம்மூன்று கண்ணுமெழி
லைந்துகரம் பத்துமவற் றுள் ... சருகூ

ஒண்மைமேவல் வாள்சூலங் கட்டுவாங் கத்தொடருள்
பண்வரத நல்வலப்பா லும் ... சகூய

துடிமா துளங்கனிதூ நாகமுட னக்க
வடநீலப் பூவாமத் தும் .... சசூக
படிகநிற மும்பங்க யாசனமும் வெங்கட்
படவரவ நூலும் படைத்து ... சசூஉ
நந்துவித்யா தேகமெண்ணி நாட்ட மிகப்பிரம
ரந்திரமட் டாக வறைந்து ... சசூங
ஆங்கதுமின் போலப்பூ வஞ்சலிக்கு ளானதுவா
வோங்குமூர்த் திக்கணிசி யுற்று ... சசூச
நேத்திரத்தை பைமுகநாட் டத்தி னிசித்துமலர்
சேர்த்தஞ் சலியத்தத் தில் ... சசூரு
மேதைமுத லீரெண் கலையடைந்த மிக்கவொளி
யாதவனோர் மூலமனு வை ... சசூசூ
ஏய்ந்த விபற்பூ ரகத்தொடிசை யத்துவாத
சாந்த மளவுச் சரித்து .... சசூஎ
அந்தமின்ஞா ஞனந்த மாஞ்சிவத்தி னைக்கோடி
யிந்துவொளி யாகநினைத் தே ... சசூஅ
இறக்கிவிந்து விற்புட்ப வஞ்சலியி னுக்குள்
ளுறப்பிரா ணச்சரியா லுற்று ... சசூகூ
இருதயத்தான் மூர்த்திப் பிரமரந்தி ரத்தே
திரமுறவா வாகனஞ்செய் தே ... சஎய

குன்று விதயத்தின் கட்குலவு தாபனஞ்செய்
நன்றுறச்செய் சன்னிதா னம் ... ௪௭௧
பந்த முறச்சன்னி ரோதனமுஞ் செய்கசெயல்
அந்தந்த முத்திரையா லாம் ... ௪௭௨
வினவிச்சு வாகதமே யீசனருள் பெற்றுத்
தனியகில நாதவுன்றன் னை ... ௪௭௩
பாவமறப் பூசை பண்ணளவு மிவ்விலிங்க
மேவியருள் வாயெனவே ண்டி ... ௪௭௪
அளித்துச் சுவாகத வர்க்கியந் தன்னைக்
களிக்குமித யஞ்சிரஞ்சி கை ... ௪௭௫
உயர்கவச மத்திரத்தை யுன்னிதய மாதி
யியல்கராந் தத்தினிசித் தே ... ௪௭௬
தொக்கமூ லத்தினா லேகத்து வஞ்செய்து
திக்குபந்த னத்தினைச்செய் தே ... ௪௭௭
அவகுண் டனஞ்செய் தறிவுக் கறிவாஞ்
சிவனெதிரான் முத்திரைசேர்த் தே ... ௪௭௮
வருவௌ ஷடங்கமூ லத்தான் மகாமுத்
திரையு மவனெதிரீந் தே ... ௪௭௯
அஞ்சுமுக முத்திரைய ளித்தேந மச்சுவதா
மஞ்சார்சு வாகாந்த மாய் ... ௪௮௰

பாத்திய மாசமன மர்க்கியம்பண் பார்மூலத்
தாத்தனுக் கன்போ டளித்து ... சஅக
அறுகரிசி பூவௌஷ டந்தமூ லத்தால்
இறைதன் முடிமிசைச்சாத் தி ... சஅ௨
அளித்ததயஞ் சேர்மூலத் தாற்றூப தீபம்
அளித்தா சமனூர்க்கி யம் ... சஅ௩
எண்ணெய்க்காப் பாதிகருத் தாலெண்ணி யாட்டியெங்கள்
அண்ணலை யாட்டியர்க்கி யம் .... சஅச
பாத்திய மாதிமூன் றும்பரிந்தீந் தொற்றுடை
சாத்தியே சந்து தரித்து ... சஅரு
அரிசி யறுகுவில் லம்மலர்பூ ணுடை
தருபூணூ லாதி தரித்து ... சஅசு
முத்தத்து வாதி பதிமுடிவி லஞ்செழுத்துஞ்
செப்பிமுப்புட் பாஞ்சலிசெய் தே ... சஅஎ
சூட்டியின்டை வாச மலர்த்தொடை மாலையணிந்
தாட்டிமணி யத்திரத்தி னல் ... சஅஅ
அளித்தேதூ பந்தீப மாசம னூர்க்கம்
அளித்தே முகமுடியைந் தில் ... சஅகூ
மனோரத முத்திரைகாட் டிப்பிரம மைந்தை
யுனுமங்க மோராறை யும் ... சகூ0

இலயாங்கத் தார்ச்சித்தே போகாங்கஞ் சாத்த
வலவ ரனுமதி யுற்று ... சகூக
அற்சித்தே மூர்த்தா னம்முடியி லீசானந்
தற்புருட மைவதனத் தும் .... சகூஉ
இதயகுய்ய தேசத் தெழிற்கோரம் வாமம்
பதாதிகளிற் சாதமும்பாங் காய் ... சகூங
வாங்கியீ சானம்பூர் வந்தென் றிசைவடக்குத்
தாங்குமேற் கிற்றளத்திற் சாத்து ... சகூச
நேத்திரத்தை நேத்திரத்தி னும்வாங்கி நேசமுடன்
சாத்தீசா னர்க்குத் தரம் ... சகூரு
இருதயத்தை வாங்கியதி லங்கியிலர்ச் சித்தே
சிரதேசத் திற்சிரம்வாங் கி ... சகூசு
நிறைநேத் திரம்வடக்கிற் சாத்திநிரு திக்கண்
சிகைபையதில் வாங்கிச்சாத் தி ... சகூஎ
கவசத்தினைச் சருவாங் கத்துநின்று வாங்கித்
தவறகல வாயுவிற்சாத் தி ... சகூஅ
காங்களிற்கொண் டத்திரம்பூர் வாதிநாற் கல்சாத்
திருந்தபுரு டாதிக் கிடம் ... சகூகூ
ஆவாக னுகிபாத்தி யாதியல ராலர்ச்சி
பாவனைமே லர்க்கமளி பாங்கு ... ருா

தூயதே னுப்பதுமஞ் சூலமக ரஞ்சுருக்கோ
டாயவைந்து முத்திரையி னே ... ௫௱௧

ஈசனு திக்கீந் திருகைகுவி முத்திரையை
யாசறுமங் கத்திற் களித்து ... ௫௱௨

அரற்குமூ லத்தாற்புட் பாஞ்சலி யீந்தே
பரற்குமகா மூத்திரையும் பண் ௫௱௩

ஈசனே டேகரிவ ரென்றுதூ பந்தீபம்
ஆசமன மர்க்கிய மீந்து ... ௫௱௪

போற்றுநா னுவிதனை வேத்தியநீர் பொற்கலத்தில்
ஏற்றிநாற் சுத்திபுரிந் தே ... ௫௱௫

கூறிச்சு வாகாந்த மூலங் கொடுத்திடுக
கூறுபிர மாங்கத்திற் கும் ... ௫௱௬

நிவேதியவர் மந்திரத்தி னில்வெவ்வே றின்றேல்
நிவேதியொரு பாத்திரத்தி னில் ... ௫௱௭

ஆசமன மீந்துகைது வட்டியடைக் காய்வாசம்
ஆசை யதனே டளித்து ... ௫௱௮

அர்க்கியமீந் தார்ச்சித்துத் தூபதீ பாசமனம்
அர்க்கிய மீசற் களித்து ... ௫௱௯

சறுவதத்து வாதிபதி மந்திரத்தைச் சாற்றி
யறுகரிசி புட்பமத னல் ௫௱௰

பவுத்திரஞ் சாத்தியா ராத்திரிகத் தைப்பண்
ணுவப்பொடுநாற் சுத்தி யுற ... ருகக
மெலச்சுவா காந்த கவசம் விரும்பிச்
சொலிக்கீழ்மேன் மும்முறை சூழ்ந்து .... ருக௨
ஈகவெழி லாசமன மர்க்கியநீ ருடிகுடை
யாய்கவரி யாலவட் டம் .... ருகங
உகந்திடையி லாசமனர்க் கங்களொடு மூலம்
பகர்ந்துபணி மாறப் பணி ... ருகச
ஈரெண் கலையெய்து மூல மனுவியம்பி
யேருறுபுட் பாஞ்சலியீந் தே ... ருகரு
அகமீரு மாமுத் திரையதனே டைந்து
முகமுத் திரையளித்து முன் ... ருகசு
வண்டுணர்கைக் கொண்டிதயத் தாற்சாற்று மக்கவடங்
கொண்டுவலக் கையிற் குறித்து ... ருகஎ
ஆற்றுமூ லத்தா லமைய நூற் றெட்டுரு
வேற்றிச் செபம்பண்ணி யே .... ருகஅ
கதுவத் திரங்கவசங் காம ரிதயம்
எதிர்சம் புடித்திதயா தி ... ருககூ
காப்பொ டவகுண் டன்ஞ்செய்து கைப்பூவை
வாய்ப்பவலப் பாணியில்வாங் கி ... ரு௨ய

அற்கியநீ ரேற்றுற் பவமுத் திரையதனோ
டுற்றமுழந் தாணிலத்தூன் றி ... ௫௨௧
அரியசெபங் கன்ம முயிரையித யத்தால்
அரன்வரதந் தன்னி லளித்து ... ௫௨௨
பிரமாங்கத் திற்குமதிற் பத்திலொன் று பேணித்
திரமாச் செபித்துநிவே தி ... ௫௨௩
அங்கிதிக்கிற் றன்குரு மூர்த்தியர்ச்சித் தங்கதனிற்
சங்கரனைப் பூசித்துத் தான் ... ௫௨௪
யோகமெனும் பீடம் வித்தியா பீடத்தை
யேகனுக்கு மேற்கிலற்சித் தே ... ௫௨௫
அற்றுன் பிரதக் கணமரும்பூ சைப்பயனைப்
பற்று னடிப்பனெனப் பார் ... ௫௨௬
துய்யவிரைப் புட்பாஞ் சலித்திரையஞ் செய்துதுதி
செய்துபிர தக்கணமுஞ் செய் ... ௫௨௭
சிரங்கன்னந் தோண்முகம்வாய் செங்கைகளோ டெட்டு
மிரும்புவியிற் சேர விறைஞ்சு ௫௨௮
விருப்பொ டிருகால மாதியில் வேண்டி
யருச்சிக்கும் வண்மையறி யில் ௫௨௯
அருத்தியொடு மாசன மூர்த்திமூ லத்தாற்
றிருத்தமுறச் சம்புவைச்சாத் தி ... ௫௩௰

போகாங்கத் தும்பிரம நேத்திரமங் கம்பூசி
நீகணித்த சந்தியெண்ணி யே ... ருநக
சிவனுக்கு விண்ணப்பஞ் செய்தோமஞ் செய்வான்
அவன்யாகத் தான மடை ... ருநஉ
அதற்கதி காரமின்றே லட்டபுட்பத் தாதன்
மதித்தபிர மாங்கத்தா தல் ... ருநந
சாத்திப் பராமுக வர்க்கியமீந் தேபூசை
சாற்று முறைமுடிக்கத் தான் .... ருநச
அதிகார முற்றுவலி யற்றலோ மத்திற்
பதின்மடங்கு செய்து செபம் ... ருநரு
மானிடமேந் திக்களித்துப் பூசைமுடி வலியோ
டானசம் பத்துமுண்டா னல் ... ருநசு
தேசுதரு மங்கிதனிற் காரியஞ்செய் வான்செப்பி
யீச னனுமதிபெற் றே ... ருநஎ
அற்கியத்தோ டங்கிமேற் குக்கிழக்கிற் குண்டந்தா
னற்றண்டி லந்தா னணுகு ... ருநஅ
உத்தரந்தான் பூருவந்தா னேக்கியுறை குண்டத்தைச்
சித்திக்க நாற்சுத்தி செய் ... ருநகூ
கனனமவ கிரணம் பூரணங் காசற்ற
சமீக ரணஞ்சே சனம் ... ருசய

குட்டனஞ் சம்மார்ச் சனஞ்சமா லேபனங்கூ
றெட்டுஞ்செய் தார்ப்பையின்வா ளின் ... ௫சக
குண்டநடு விற்குசையா லத்திரத்தாற் கூர்நுதிசீ
ருண்டாம்பூர் வத்தி லுற ... ௫சஉ
திரிரேகை கீறி நுதிவடக்கிற் செல்ல
வொருரேகை கீறி யுவந்து ... ௫சங
செய்துகவ சத்தப்பி யுக்கணஞ்செய் யுஞ்சேடஞ்
செய்ததுவா கப்பாவித் தே ... ௫சச
கட்டங் களையுமதன் கண்ணிதயத் தாற்கூர்ச்ச
விட்டரத்தை வைத்ததன்றன் மேல் ... ௫சரு
ஆகம் பசியவளா யுலகிற் காயிருது
வாகிநீர் மூழ்கின ளாய் ... ௫சசா
உடையணி மாலைவிளங் கோர்முகங்கஞ் சம்போன்
றிடுகண்கண் மூன்றினளா யே ... ௫சஎ
மதியுறவா கீஸ்வரியை யன்னவண்மூ லத்தால்
விதியுறவா வாகிபா வித்து ... ௫சஅ
வலத்தபைய கூர்ச்ச மிடத்தக்க மாலை
யுலக்கணறுக் கும்வர தம் ... ௫சகூ
அணுகுவா கீசரைச்சிந் தித்தவர்மூ லத்தால்
அணுகிடச்செ யாவாக னம் ... ௫௫௰

இனியவிந்து நாத மிருவர் வடிவென்
றெணியர்ச்சித் தர்க்கியமீந் தே ... ௫௫க
புங்கவெனுவி கோலாதி யிற்றமுருன் புண்ணியர்
தங்கு மணையங்கி தான் ... ௫௫உ
வளர்தூய பாத்திரத்து வாங்கி யதிலோர்
கிளர்சகலந் தென்மேற் கினில் ... ௫௫௩
அரக்கர்கூ றத்திரத்தாற் போக்கிநாற் சுத்தி
வருத்தியங்கி மூலமனு வால் ... ௫௫௪
சங்கார முத்திரையாற் பூரகத்தி னேடுதயங்
கங்கியையுள் வாங்கியிடை யால் ... ௫௫௫
அங்கும்ப கத்தாலுந் தித்தீவிந் துத்தானத்
தங்கியுடன் கூட்டுகவென் றூய் ... ௫௫௬
வாய்த்த விரேசகத்தான் மன்னியநற் பிங்கலையாற்
பாத்திரத்தி னிற்றீயின் பால் ... ௫௫௭
வன்னிசை தன்னிய மந்திரத்தாற் றீபகத்தொத்
தன்னவங்கி பீசந் தனை ... ௫௫அ
உற்பவ முத்திரையி னுலொருமை யோடுறவைத்
தற்சித்துச் சங்கிதையி னல் ... ௫௫௯
சீரியநெஞ் சத்தாற் சிறந்த பரமேசன்
வீரியம தாகப்பா வித்து ... ௫௬௰

வாகீ சுரிகர்ப்ப நாடியில்வா கீசுரரால்
ஏகுவதா கப்பாவித் தே ... ருசுக
ஆபத் தகற்றி யருள்புரிமூ லத்திறுற்
ரூபித்துக் கேத்திரத்துத் தான் ... ருசுஉ
தீதகறே விக்குவத்தி ரஞ்சவுச மாசமனம்
ஆதியித யத்தா லளித்து ... ருசுஙூ
சத்தியோ சாதாதி யைந்தாலர்ச் சித்துமூ
லத்தாலேங் தாகுதி யீந்து ... ருசுச
பூருவமு தல்வடக்கங் தம்பிரமன் மாலரன்பொய்
தீரு மனந்தரைச்சாத் தி ... ருசுரு
ஆதிகிழக் காகத்திக் கெட்டி லமரர்கோன்
ஆதியெண்ம ரானவர்ச்சாத் தி ... ருசுசு
பிரமனையி சானத் தருச்சித்துப் பீடார்
திருமா னிருதியிற்சாத் தி ... ருசுஎ
ஓதுங் தழற்சிசுவைக் காத்திடுக வென்றுள தாங்
தீதகல் விண்ணப்பஞ் செய்து ... ருசுஅ
உதாகனநின் றுமஞ் சிவாக்கினியென் றோதிப்
பிதாமாதா வைவிடுத்தே பின் ... ருசுகூ
தற்பரனை முன்போற் றழலிதயத் தார்ச்சிபின்னர்
அற்றமினெய் யெண்ணமுத மால் ... ருஎ0

புதுமையுறு நைவேத் தியப்போதின் மூலம்
அதனுற் சிலசெய்தோ மம் ... ருஎக
மொய்த்தபிர மாங்கத்தி னுக்குமூ லாகுதியிற்
பத்திலொன் ருேமம் பணி ... ருஎஉ
நன்குறத்தந் தேபூர ணுகுதிநை வேத்தியத்தின்
றன்பொருட்டோ மஞ்செய் சரு ... ருஎங
வவுஷடந் தம்பூர ணுகுதிக்கோ மத்திற்
கவிர்சுவா காந்தமு மாம் ... ருஎச
ஆசமனஞ் சந்தனந்தாம் பூலா திகளளித்தே
யேசிலட்ட புட்பஞ்சாத் தி ... ருஎரு
ஈந்து பராமுகவர்க் கந்தீ யிறையிலிங்கத்
தேய்ந்தசிவன் பால்யோசித் தே ... ருஎசு
அரணிமூ லந்தன்னு லாகுதிசெய் தீக
பிரமாதி கட்குப் பலி ... ருஎஎ
படிக்குமறை யோதுபிர மாதிகளைப் பாங்கா
யொடுக்கு முறையி லொடுக்கு ... ருஎஅ
உன்றனுக்குத் தெற்கிலிரு மண்டலமுண் டாக்கியதின்
முந்தினதிற் பூர்வமுன்னுன் கில் ... ருஎகூ
உருத்திரர்கண் மாதாக்க ளோடு கணங்கள்
உரைத்த வியக்கரை யும் ... ருஅ௰

தள்ளரும் சாதிநான் கிற்கிரகந் தானவரோ
டொள்ளரக்கர் நாகரை யும் ... ருஅக

மண்டல மத்தியிலீ சான திசை வன்னி திசை
கண்ட நிருதிதிசைக் குள் ... ருஅஉ

அற்றமில்வின் மீன்களினே டான விராசிகள்சீர்
உற்றவிசு வங்களை யும் ... ருஅங

சீலமார் வாயு வருணநடுக் கேத்திர
பாலனையும் பூசை பணி .... ருஅச

ஆனசுவா காந்தமா கப்பலியு மார்க்கியமு
மூனமற வீந்தனவர்க் கும் ... ருஅரு

ஏனைய மண்டலத் திந்திர * ஞதியர்தந்
தானமதி லெண்மரையுஞ் சாத்து ... ருஅசு

பிரமனையி சானத்தர்ச் சித்தருச்சி பின்னர்
அரியை நிருதி யதில் ... ருஅஎ

நடுநீல லோகிதரை யர்ச்சித்து நல்கி
யடைவி னெடுமருக்கி யம் ... ருஅஅ

அளித்துருத்தி ராதியர்க்கு முந்திப் பலியை
யளித்தா சமனுக்கி யம் ... ருஅகூ

இந்திர ராதியர்கட் கீந்துபலி யாசமனந்
தந்தவதன் பின்புறத்திற் றூன் ... ருகூ௰

---

* ஞதித்தர்தந் பாடபேதம்.

கொடியா திகள்சமைய பேதிகள்சேர்ந் தார்க்கொல்
கடிய தழலாதி கள் ... ருகூக
புகல்வாத்துத் தேவதைக ளின்பொருட்டார்ச் சிக்க
வகலா வவர்மனுக்க ளால் ... ருகூஉ
அடுத்த சுவாகாந்த மாய்ப்பலிக ளீந்தே
யொடுக்கி யனைவரை யும் ... ருகூங
ஒருத்தி ராதி மனுவிலரு மண்டலத்தார்க்
கோரத்தா னூட்டலு மாம் .... ருகூச
இவ்வாறு வேண்டினிது செய்யேது செய்யினும்
மவ்வாய் மனுமகத்தாக் கி ... ருகூரு
மருவுபிரா ணயாம மன்னுநியா தஞ்செய்
தரனையர்க்கி யத்தோ டடைந்து ... ருகூசு
அவாவொடிரந் தர்ச்சனையோ மாதிப் பலத்தைச்
சுவாகாந்த மூலஞ் சொலி ... ருகூஎ
அத்தன் வரதத்தி லர்க்கியத்தோ டுற்பவ
முத்திரையா லீந்திடுக முன் ... ருகூஅ
அட்டபுட்பஞ் சாத்தியீந் தைமுக முத்திரைபின்
சத்தியோ சாத முதல் ... ருகூகூ
ஐந்துமுடிக் கண்மூலத் தாலருச்சித் தர்க்கியமீந்
தந்தமில்போ காங்கமவைக் கும் ... சூா

முறைமை யுறவத் திரமுதலீ சானம்
இறுதியர்ச்சித் தர்க்கியமீந் தே ... கூாக
ஆரத் திரமலரா ஞராச முத்திரையால்
ஏர்மந் திரமெழுப்பி யே ... கூாஉ
மூர்த்திமனு வாற்றிவ் வியமுத் திரைமலரான்
மூர்த்தியில்யோ சித்து முடித்து .... கூாங
குன்றுமூ லத்தாலர்ச் சித்தார்க் கியங்கொடுத்தே
யென்றன் பிழைபொறுப்பா யென்று ... கூாச
செய்திடுக திக்குபந்த னத்தைத் திகழ்ந்திடவே
செய்கவவ குண்டனத்தி னை ... கூாரு
ஆய்ந்தசிகார முத்திரையீந் தான குருமுதலோர்க்
கீந்து பராமுகார்க்கி யம் ... கூாசா
விடுத்தேபின் மேவுசண்ட ஞசன மூர்த்தி
யடுத்தமூ லத்தாற்சாத் தாய்ந்து ... கூாஎ
எண்டோளன் சாத்து மவைமிசைவ தாதியெலாஞ்
சண்டன்மூ லத்தளித்துத் தான் ... கூாஅ
உதவுசெபஞ் செய்தளித்தே யுற்ற பிழையா
மிதனைப் பொறுத்தருளென் றே ... கூாகூ
உதவியர்க்கி யம்மொடுக்கி யுற்ற மூலத்தால்
தஇயகம லத்திலமைத் தே ... கூகய

மருவு மருக்கியத்தின் மன்னிய மாமந்
திரமெழுப்பி வைத்திதயத் தில் ... ௬௰௧

சிவபூசை முற்றிற்று.

செபம்.

ஆறைந்து நான்குமுன் னோர்முகமா மவ்வவினம்
ஏறவெண்பட் டெப்பாசத் தில் ... ௬௰௨
கதவுதலிற் கண்டி முகமுமுகஞ் சாரச்
செபவடங்கோ புச்சமொன்றச் செய் ... ௬௰௩
புத்திமுத் திக்குப் புதியகண்டி மூவொன்பான்
பத்தியொடை யைந்தாகப் பண் ... ௬௰௪
அக்கோர்வை மேரு வினையருச்சித் தேபிறர்தஞ்
சக்குநோக் காதொழித்துத் தான் ௬௰௫
விளம்பனைத்தி னுக்குஞ் சதஞ்சதமீ சானம்
விளம்பகோ ரம்மேரு வில் ... ௬௰௬
பற்றற்றான் மேனோக்கிப் பண்ணிடுக மாலையினைப்
பற்றுற்றான் கீழ்நோக்கிப் பண் ... ௬௰௭
உரைசெய் செபத்தைமணி யோசையின்றிச் செய்க
தரளங்கோத் தாற்போலத் தான் ... ௬௰௮

முத்திபிரா ணன்சுடரிற் செல்கான் மனுமொழியிற்
புத்தியிந்து விற்செல்போ து ... ௬௰௯
இரண்டுஞ் சுழுமுனையி டத்தெய்தி லெய்து
மெரியா யிலங்கு மிது ... ௬௨௰
வலக்கையிற் றர்ச்சனியின் மத்திமையின் மற்றுங்
கலக்கு மனாமி கையில் ... ௬௨௧
சேர்த்துவட மங்குட்டத் தாற்செபிக்க வேமேற்சொல்
வார்த்தைமந்த மானதமா கும் ... ௬௨௨
தனது செவியளவே சார்வது மந்தம்
மனதளவே யாமா னதம் ... ௬௨௩
மானதமா கச்செபிக்கிற் கோடி குணமதிகம்
ஊனமின்மந் தம்முரையி னும் ... ௬௨௪
எண்ணுறு தேசெபிக்கி னில்லைப் பலமிகவும்
எண்ணிச் செபியீசற் கே ... ௬௨௫
செபமறந்தான் செப்பி டிருகுணித மாகச்
செபியுணர்ந்தே ஞற்குணிதந் தேர்ந்து ... ௬௨௬
இலிங்கத்திற் சொல்பரிகா ரத்தினு லத்தொன்
றலங்கு செபவடத்துக் காம் ... ௬௨௭
செபவடமே ருக்கடக்கிற் செப்பா யிரமச்
செபவடமற் றுனூறு செப்பு ... ௬௨௮

இலிங்கத்திற் சொல்பரி காரமெட்டி லொன்றே
யிலங்குமற்ற மாலைகளுக் கே ... ௯௨௯
அம்பாத்தி யாசமன வர்க்கமறிற் சொல்சதஞ்சா
தம்புருட மீசானத் தை ... ௯௩௰
உருளி லொடுக்கலறி லர்க்கியமோ ரைந்நூ
றிருநூ றுடையிலாயி ரம் ... ௯௩௧
ஆவாக ஞதியீ ரைந்துதுவா ரார்ச்சனைசீர்
பாவுபஞ்ச சுத்தி பணூன் ... ௯௩௨
சதமுறையே சாற்று பிறழினுட னுன்னில்
அதிலரையா மென்றே யறி ... ௯௩௩
மூலஞ் சதமுறையே சொன்னியதிப் பண்டமுட்டிற்
கோலுமட்டின் மஞ்சனங்குன் றில் ... ௯௩௪
சதமிதபஞ் சாற்றுதயி லாதிமுட்டிற் சாற்றி
டதிலரையா னைந்தாதி யேல் ... ௯௩௫
அலரற் றிருக்கிலிலிங் காதி முடிக்குச்
சொலுசதம்பூச் சாத்திரட்டித் து ... ௯௩௬
எந்தையைப்பூ சித்தபண் டத்திலுமோ மாதியா
னைந்தாட்டி முச்சதங்கூ றன்று ... ௯௩௭
கோழையுறு நீரிலங்கத் திற்படிற்கூ றீரயுதங்
கோழையுறின் மூன்றயுதங் கூறு ... ௯௩௮

ஈச னுருவிற் பொழிகலசந் தீண்டியே
யோசையுறி லீரயுத மும் ... கூங௧
இன்றி யரவ மிறைமேனி யிற்ருக்கிற்
குன்ரு வயுதமுங் கூறு ... கூ௪0
கையாதி யுற்றுக் கடவு ளுருவசைந்தால்
ஐயிருப தங்க ணறை ... கூ௪௧
ஆயிரமே லிங்கநகர்ந் திட்டா லறைகவிரண்
டாயிரமே சொல்கசுழன் ருல் ... கூ௪௨
பீடத்திற் சாயின் மிகவு முருளிற்பே
சாடிமுந்நூ ரூரயுத மாம் ... கூ௪௩
பதத்தூளி லிங்கத்திற் பட்டா லயுதம்
பதமுறிற்கூ றீரயுதம் பாங்கு ... கூ௪௪
சந்தன மற்ரு விருகுணிதஞ், சாத்திநூ
றெந்தையீ சான மியம்பு ... கூ௪௫
அன்ன னிவேதனத்தூ னத்திமயிர் கீடாதி
நண்ணி லயுத நவில் ... கூ௪௬
உணராவ ததனி லுரைத்தமயி ராதி
யணுகி லியம்பனூ ரும் ... கூ௪எ
குறையி னிவேதனந் தப்பி விடிற்கூர்ந்
தறையிரு நூறயுத மன்று .... கூ௪அ

சதம்பகர்தூ பாதிதர்ப்ப ஞாதிதப்பி லந்தச்
சதந்தனிற் பாதிமறந் தால் ... ௯௪௯
கொங்கமர்தூ பத்திற் குறுகி யிடிலுயிர்கள்
அங்கமுரை யீசா னம் ... ௯௫௰
விழினிலிங்க மாழ்நீர் விளம்பு நியுதம்
எழிலுறத்தா பிக்கவிதி யால் ... ௯௫௧
நியுதமுரை நின்மா வியக்குழிவீழ்ந் தாலீ
ரயுதமிலிங் கங்கடந்தா லாம் ... ௯௫௨
ஆதார மின்றிவிழிற் சாணுக் கிரண்டயுதம்
ஆதார மேற்சொலயு தம் ... ௯௫௩
தளர்வவிவ்வா றேற்றிச் சாற்று புருடத்
தளவே லிலைப்பரிகா ரம் ... ௯௫௪
உரையா யிரமொருநாட் பூசைமுட்டி லப்பால்
இருநாண் முதலாக வே ... ௯௫௫
ஆயிரத்தி னூடுமுந் நூறு தினங்கூட்டி
யேவுரைமூ வைந்துதின மேல் ... ௯௫௬
கோலியே யீரயுதங் கூறுகவோர் திங்களினில்
நாலயுத மாக நவில் ... ௯௫௭
அப்பாலோ ராண்டளவேற் றிங்க டொறுமதிகஞ்
செப்பேற்றி யீரயுதந் தேர்ந்து ... ௯௫௮

ஊக்கமுறு மாண்டிற்கப் பாலுமொழி யிற்பூசை
தீக்கையினு லாகுஞ்சுத் தி ௬௫௧
எண்ணிழந்து பூசிக்கு முன்புசித் தான்மனம்
பண்ணிப் புனலிற் படிந்து ... ௬௬௰
இருகுணிதம் பூசை யியற்றிப் பிரம
சரியா யுபவசித்துத் தான் ... ௬௬௧
அயுதமூ லஞ்சொலியா திக்குமற்றை நாட்பொன்
னுபர்பலிசெய் வித்தே யுதவு ... ௬௬௨
அயுதமிலிங் கம்வலைப ராதிதொடிற் சொல்லீ
ரயுதங்கா காதிதொடி லாம் ... ௬௬௩
கரிசுற்ற நாய்க்கடுவா ஞதியர் கண்ணுற்
றரிசிக்கி லைந்தயுதஞ் செப்பு ... ௬௬௪
தொடின்ஞானி மூன்றயுதஞ் சொல்கவிப மாட்டு
தொடிலந் தணர்நூறு சொல் ... ௬௬௫
முச்சாதி யேலிரண்டு மூன்றுசத நான்குசதஞ்
செப்பிப் பலிசிறக்கச் செய் ௬௬௬
அழல்சூழப் பட்டிலிங்கங் காந்திகுன்று தாயின்
ஒழியவுரை மூவயுத மோர்ந்து ... ௬௬௭
வெந்திடி னுய்க்கெரிப்பான் றீண்டிலொழி வேறிலிங்கந்
தந்திடக்கொ ளோர்நியுதஞ் சாற்று ... ௬௬௮

இட்டலிங் கங்கள்வ ராதியினு லேகிடிலே
யெட்டுநாட் பட்டினியுற் றே ... கூகூகூ
உளமதிலர்ச் சித்துப்பா லோங்கு கனியாதி
யிளநீ ரவையருந்தி யே ... கூஎ௰
ஐம்முக னைச்சிந்தை செய்திருந்தே யவ்விலிங்கம்
எம்முயற்சி யானுந்தேர்ந் தே ... கூஎக
கிருகித் திலிங்கசுத்தி செய்துகீழ் போலத்
திருவாரும் பூசையினைச் செய் ... கூஎ௨
காணுதேல் வேறிலிங்கங் கைக்கொ ளதன்பின்னர்க்
காணி லிரண்டுமர்ச்சி கற்பு ... கூஎ௩
பூசையுப யோகத்திற் றுன்மறந்துற் றுற்புகறல்
ஆசை யுடனிருநூ றும் ... கூஎ௪
பண்ணுதல் செய்பரிகா ரத்தி லிரட்டிகுற்றந்
தன்னிலங்கத் தன்னியன்செய் தால் ... கூஎ௫
அயர்ச்சியுற்றே பூசைபர்வ கால மவையில்
இயற்றுன்சொன் மூலநூற் றெட்டு ... கூஎ௬
ஆடிமுதன் மூன்றிற் பவித்திரஞ்சாத் தானியுதத்
தோடோர் நியுத முறை ... கூஎஎ
விரதங் கிரியைநிய மம்விழிற் காயத்
திரிசொலஞ் ஞூறதுவுஞ் செய் ... கூஎ௮

ஆற்றுது முட்டினித்தி யாங்கியரன் பூசைக்குச்
சாற்றியது போற்செய் தளர்ந்து .... சுஎசு
இறைபொடுசேர் வன்னிகெடின் முந்நாட் பசியுற்
றறைக பதினு யிரம் ... சுஅ௰
மாயாமற் காத்த வளரங்கி மாய்ந்துவிடில்
ஆயிரங் கூறுபசித் தன்று ... சுஅக
அறைக விரண்டயுதம் புத்தகமா சான்மேல்
அறியாது தம்பதமுற் றுல் ... சுஅஉ
குருவிலிங்க வேடத்தார் சாயைகடக் கிற்கூ
றுருமையின் முந்நூறோர்ந் து ... சுஅங
கோவிளக்கு முந்துங் குலத்தார் நிழல்கடக்கும்
பாவமற நூறு பகர் .... சுஅச
முத்திதன் போதகன் சாதகன்மூன் னிந்தகன்சொல்
பத்தயுதம் பாதிதற்பா தி ... சுஅரு
உரைநியுத நித்தியத்தி னும்பரிகா ரத்துங்
குருவினைத்தா னேவல் கொளின் ... சுஅசு
அறிந்துகுரு வர்ச்சனைதப் பிற்கூ றயுதம்
அறியாமை யாலா யிரம் ... சுஅஎ
குருவைவெல வெண்ணிலைஞ் ஞூறுமெதிர்த்துக் கூறில்
உரைசெயலெண் ணுபிரமா கும் ... சுஅஅ

சமையி முதன்மூ வரையிகழிற் சாற்றி
டமைபிரம மூவைம் பது ... ௯௮௯
விழிற்புத்த கம்புவியின் மேதினிவைத் தோதில்
விழிற்கயிறு பூதலத்தின் மேல் ... ௯௯௰
மாசுற்ற தானத் திறப்பில் வளர்சயனத்
தாசனத்திற் புத்தகம்வைத் தால் ... ௯௯௧
அஞ்ஞூ றறைக வகாமத்திற் காமத்தீ
ரைஞ்ஞூ றறைகவெவ்வே றுய்ந்து ... ௯௯௨
சாத்திரத்தை மந்திரத்தை யிட்டமிடி யாற்சாற்றில்
ஆர்த்தியறக் கூறு யிரம் ... ௯௯௩
மணலிலிங்க மேமரத்ந லிங்கஞ் சுயம்பு
கணிகலிங் கஞ்சலலிங் கம் ... ௯௯௪
புத்தகமா தாக்கள் பிரதிமையா சான்புகளுஞ்
சித்திரந் தீப்பாற்ப தி ... ௯௯௫
என்ற விவற்றினிவே தித்தநின் மாலியபம
தன்றெனவே கூறு மறி ... ௯௯௬
மானுட லிங்க மதற்கு நிவேதிதம்
ஆனது நின்மா லியம் ... ௯௯௭
நிருத்தன்சொங் கொண்டோர்மீண் டீந்து நிகழ்த்தக்
கிருச்சிரத்தைச் செய்கவிதி கேட்டு ௯௯௮

நணுகு மரன்றிரவி யங்கவரி ஞன்கு
குணிதமீந் தேநியுதங் கூறு ... ககக

அறிந்தெனி லங்குணித மீந்தா தரவு
செறிந்தே யிருநியுதஞ் செப்பு ... எா

அருந்தினை வேத்தியமீ சற்கதற்கு நேராய்ப்
புரிந்தீந் தயுதம் புகல் ... எாக

அரன துநி வேதிதந்துய்த் தாலரன்றன் பஞ்சப்
பிரமமை யைஞ்ஞூறு பேசு ... எாஉ

உரையிருபத் தையா யிரமுயர் சண்டன்
றிரவியஞ்சற் றேனுமருந் தில் ... எாங

அதனைப் புறம்பிலுய்க்க நின்மா லியமாம்
அதுபுசித்தார் கூறுநியு தம் ... எாச

காமத் ததனைப் புசிக்கிற் கடும்பாவம்
ஏமமுறுந் தீக்கையிற்சுத் தி ... எாரு

அயுதஞ்சொ னின்மா லியங்கடக்கின் மூழ்கி
யயுத மறைகமிதித் தால் ... எாசு

இலங்கிய லென்றதெய் வத்திரவி யாதி
யலங்கலுறு மஞ்சினையு மாம் ... எாஎ

புறம்பிலுய்த்த நின்மா லியங்தொடிலப் போதே
அறைந்திடுத லோரயுத மாம் ... எாஅ

அருந்திடினின் மாலியஞ்சங் காரமா யன்றே
யிரும்பிரம முந்நூ றியம்பு ... எாகூ

நல்கிலொரு வர்க்குமறந் தீசனின் மாலியத்தைச்
சொல்க வயுதந் துணிந்து ... எாய

செபம் முற்றிற்று.

போசனம்.

ஆலயத்தின் மேவிச் சிவனையர னூல்விதியாற்
சீலமுடன் சேவையினைச் செய் ... எயக

நண்ணுங் கரங்கால் கழுவியே யாசமனம்
பண்ணி நியாதம் பணி ... எயஉ

பூர்வமுனந் தம்வடக்குப் போதக ஞதியர்க்காம்
பூர்வதிசை யார்க்கும் பொது ... எயங

உற்றவருட் சாதகனுக் குத்தரமு மாகுமன்றி
மற்றையர்க்குப் பச்சிமமு மாண்பு .... எயச

மிக்க தவஞ்சாதி மேன்மை யுளதீக்கை
யொக்கு மவர்க ளுடன் ௭௰௫

ஒருவர்க் கொருவர்தொடா தோர்பந்தி யுற்றே
மருவுதலைக் கட்டில்லா மல் ... ௭௰௬

முழந்தாண் மிசையத்த மூன்றிமோ னத்தோ
டிழிந்தவரை நோக்கா திருந்து ௭௰௭

முழநீளங் கோமயத்தாற் பூமியிற்றன் முன்னே
மெழுகி யிரேகையிடன் மேல் ... ௭௰௮

மறுவிலா சான்முதனல் வர்க்கு மடைவே
யறிநான்கு மூன்றிரண்டொன் ருய் ... ௭௰௯

அரசத்தி யாலோ டாமணக்குத் தான்றி
சுரைதாழை சேக்கிஞ் சுகம் ... ௭௨௰

ஓங்குமெருக் குச்சாதி யுற்றவகு ளத்தினொடு
வேங்கையிது வாதி விடு ... ௭௨௧

பதுமங் கதலிபுன்னை பாதிரிவெட் பாலை
மதுகம் பலாசு தும்பி மா ... ௭௨௨

ஆகும் பலாவுற் பலஞ்செண் பகங்கடம்பு
பூகமிலை சுத்திசெய்து போடு ... ௭௨௩

ஒருசாதி யாயுங் கதலியிலே யேற்றண்
டுரியா தடிவலத்தா யும் ... எ௨௪

அந்தமில்பொன் னுதியுமாஞ் சுத்திசெய்தேழ் காற்கோர
மந்திரிகஞ் சக்கலமு மாம் எ௨௫

ஆன்றுப் பதனிற் புரோக்கித் ததன்மீதிற்
றூன்றன்னை யொத்தவன் றூன் ... எ௨௬

பாகம் பணிச்சிவ னுக்கென்று பாத்திரத்தோ
டாகுமனம் பெய்க வதில் ... எ௨எ

கறியுப் பனமிவைகள் கையா விடாமற்
றெறுவியத னுவிடுக தேர்ந்து எ௨அ

உந்துமத்தி ரத்தாற் புரோக்கித் தொளிர்வவுஷ
ட்ந்த மிருத்துஞ் சயம் ... எ௨௯

அவமறவேழ் கால்ஸ்ரீமந் திரித்துவெவ்வே றன்னஞ்
சிவனுசா னுக்குநிவே தித்து ... எ௩௰

வலப்பாலிற் கோமயத்தான் மண்டலமிட் டேயத்
தலத்தினிலி டற்பம் பதம் ... எ௩௧

அறலங்கை யேற்றபினு காதி யறைந்தே
யுறுகனிட்டை தன்னு லுகுத்து ... எ௩௨

சேடித்த நீர்வளைத்தீ சானத்திற் றற்புருடம்
பாடித்தன் னீரைப் பருகு ... ௭௩௩

பற்றியிடப் பாணிநுகர் பாத்திரத்தை யுண்பதெலா
நற்றழ லாகுதியாய் நாடு ... ௭௩௪

ஓதத் திரத்தா லுதராக் கினியெழுப்பிக்
கோதில் பிராணுதிக் கும் ... ௭௩௫

பலியிடுகை யிற்செறிந்த பல்விற் படாதே
நலமிருக முத்திரையி ஞல் ... ௭௩௬

வெள்ளுளிதேன் கொம்மடிக்காய்சிற்குருவெண் கத்தரிக்காய்
வள்ளி பசளைகோ வை ... ௭௩௭

இன்ன பிறவும் விலக்கி யிவையனைத்தும்
இன்னலெென நீக்கியருந் தி ... ௭௩௮

கோகன்ன முத்திரையா னீரருந்தி முன்போல
மேவுமனைக் கப்புறமே வி ... ௭௩௯

எண்ணிருகால் வாயுமிழ்ந்து நீரிற் சுசியனைத்தும்
பண்ணியபி ஞசமனம் பண் ... ௭௪௰

வலக்கைநீ ரங்குட்டத் தால்வலது பாதாங்
குலிக்கண்பெய் மாசறுகைக் கொண்டு ௭௪௧

இருந்து புனிதமுற நீறணிந்து கையாற்
பரிகையெனு முத்திரைபண் பாங்கு எசஉ

பாணியுட னங்கநியா தஞ்செய் தகோரமனுப்
பேணுநூ றேத்தியதன் பின் ... எசங

மவுனம் விடுத்தடைக்காய் சுக்கொன்ற மாந்திச்
சிவனையுணர் வுட்கண்டு சேர்ந்து ... எசச

தூங்கி விழித்தருணு லோதி யடியரொடும்
ஓங்கிரவி மேல்பா லுறின் ... எசரு

சந்தியுடன் பூசையன றக்கதகச் செய்துவந்
தந்திவண்ணன் கோயி லடைந்து ... எசசு

ஆருயிர்கட் கெல்லா மருள்புரிந்து காப்பானை
நாருடனே போற்றி நயந்து ... எசஎ

இல்லணுகிப் போகியே லீவ துடற்கீந்து
மெல்லணையி லேறி விரைந்து ... எசஅ

நினைவுமறப் பற்றுயிரு ணீங்காது நின்ற
வினையிலியை மேவியரு ளால் ... எசகூ

இருந்திடுக மெய்யி னிளைப்புணர்ந்து பாயற்
பொருந்தித் துயில்சிறிது போது ... எருய

நித்திய கன்ம நெறியார்க் கிவையோர்ந்த
புத்திமுத்தி யுண்டாம் புகழ் ... ௭௫௧

ஆகமங்க ளாய்ந்து கடவூரின் வாழருமை
யாகுமறை சாற்றிடுநா வான் ... ௭௫௨

பஞ்சாக் கரமுனிவன் பாடுகென மாநிலத்தோர்
துஞ்சா திடரிற் சுழன்று ... ௭௫௩

இதம்பெறவிந் நூலுரைத் தான்றருமைச் சைவ
சிதம்பர நாதமுனி தேர்ந்து ... ௭௫௪

ஓதினோர் கற்றோர்க் குறுகிரியை செய்தாரிற்
பாதியதிற் பாதி பலன் ... ௭௫௫

போசனம் முற்றிற்று.

நித்தியகன்மநெறி முற்றிற்று.

ஞானசம்பந்த குரவர் திருவடி வாழ்க.